# ன்மோகினி.

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்



## மாயப்ரபஞ்சம்.

(ஆரம்பம்.)

1. அறிவுப் பிரசங்கம்—அதிகப் பிரசங்கம்.
2. பக்திப் பெறுக்கே முக்திக்குத் தோணியாம்.
3. சிதறிய காதலும் பதறிய நெஞ்சமும்.
4. வெடித்திடும் இதயம்—விஷபானப் பிரயோகம்.

---

இதர முக்கிய அம்சங்கள்.

| | | |
|---|---|---|
| டாக்கி விமர்சனம் | ... | சிந்தாமணி |
| கவிதா மண்டலம் | ... | புது வருஷப் பா |
| புத்தக விமர்சனம் | ... | தேனீ வளர்ப்பு |
| உதிர்ந்த மணிகள் | ... | தினசரித் தமாஷ் |

விசேஷக் குறிப்புகள்.

12553

JL
1211,N22 Jm
N32.4.5
183002

யப்ரபஞ்சம்

அ

# எது பெரிது?

பணமா? குணமா?
அந்தஸ்தா? இதய பூர்வ அன்பா?
மனிதத் தன்மையா? அதிகார ஆட்சி
தாயின் சேவையா? தன்னுடைய சுக
உண்மைப் புகழா? வீண் ஆடம்பரமா
கள்ளக் கும்பிடு உழைப்பா? உள்ளார்ந்த ஊழியமா

V

இதுபோன்ற பல கேள்விகளுக்கு பதிலை நீங்கள் சீக்கிரம் எங்கள் முதல் சமூகப் படத்தில் காண்பீர்கள்!

"ஜகன்மோகினி" ஆசிரியை
ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

# ராஜமோஹன்

ரஸிகர்களை பலவிதத்திலும் திருப்தி செய்யும் படமிதுவே!

# சிறந்த

கதைப் போக்கு
சங்கீதம்
நடிப்பு
டைரெக்ஷன்
ஸ்டுடியோ

பல அரிய நீதிகளும் உண்மைகளும் கொண்ட உயரிய சமூகப்படம்.

நடிக நக்ஷத்திரங்கள் ஒருங்கே சேர்ந்து தமிழ் நாட்டுக்குப் பெருமையைக் கொண்டு வருகிறார்கள்

K. P. கேசவன், காளி. N. ரத்தினம், K. K. பெருமாள்,
T. R. B. ராவ், மாசிலாமணி, V. C. L. கிருஷ்ணன்,
மிஸ். M. M. ராதாபாய், கண்ணம்மாள்,
உங்கள் பிரிய கதாநாயகி...............

இன்னும் பலரும் கூடிய வெற்றிக் கோஷ்டி

டைரெக்ஷன் :—பிரேம் ஸேத்னா

## நேஷனல் மூவிடோன் கம்பெனி லிமிடெட்,

சென்னை.

| Studio: Tel. 4094 | Telegram: | Office: Tel: 4093 |
|---|---|---|
| 71, Poonamallee Road, | | 55, Armenian St., |
| Kilpauk. | "Movietone" | George Town. |

# சென்னை பாரகன் டாக்கீஸில்

**15-5-37**

முதல்

நடைபெறப்போகும்


18 3002
600 008


# சதி--அநுசூயா

## கோவை பிரிமியர் சினிடோனின்

அதி உன்னத தயாரிப்பு

எமது அடுத்த படங்கள் :—

ஸ்ரீ கந்த லீலா — *தயாராகி வருகிறது.*

கள்வர் தலைவன் — M. K. *ராதா,* T. S. *பாலையா,* M. V.

நடிப்பா

*For Booking Apply to :—*

**Manorama Films, Coimbator**

ஸ்ரீ:

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியேன்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் 14 | ஈச்வர ஸ்ரீ சித்திரை மீ<br>MAY 1937. | இதழ் 5 |
|---|---|---|


"வாரிஜ மலர்கோய்ப வாஞ்சையுடன் துஞ்சரம்
வாவியில் சென்றிறங்க
வன்மீனும் கரியதன் காலினைக்கவ்விட
வருந்திக் கண்ணீர் பெருக்க

பாரதிர் தொனியுடன் ஆதி மூலா வென்று
பாங்குடன் ஓலமிட்ட
பத்தனின் இடர்நீக்க விரைவுடன்
ககமீதில் பண்பாகத் தோன்றி நின்றன்

வீறு சேர்ஆழியால் முதலையைக் கொன்று பின்
வேழத்தைக் கருணையோடு
மேதினி புகழ்ந்திடக் காத்திட்ட வரதனே!
விண்ணவர் பணிநாதனே!

சீருடைய திருவல்லிக் கேணிதனில் சிறப்புடன்
சேவை தந்தருளும் கோனே!
திருமகள் நாதனே நறுமலர் பாதனே!
சீதரா! சரணம் சோனே!

வை. மு. கோ.

# எது அவசியம்?

ஸ்ரீ M. C. ஸ்ரீநிவாஸன், M. A. B. L., அட்வொ கேட்

சென்ற மாதத்தில் ராஜீய விஷயத்தைப்பற்றி எழுதும் சமயம் காங்கிரஸ் மந்திரிப் பதவி ஏற்றுக்கொண்டால், தேசத்திற்கு எம்மாதிரியான நன்மைகள் செய்யமுடியும் என்றதைப்பற்றி யோசிக்க நேர்ந்தது. நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைப்பது இயற்கையல்லவா? மாகாண கவர்னர்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கேட்ட உறுதி மொழிகளைக் கொடுக்க மறுத்ததும் அதன் காரணமாக மந்திரிப்பதவிகளைக் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் ஏற்காமல் வாளா இருக்கின்றனர். நாம்கே வாஸ்தே மந்திரிகளைக் கவர்னர்கள் நியமித்து மாகாண அரசாங்கத்தை நடத்தத் துணிந்ததும் பழங் கதைகளாகி விட்டன.

வாக்காளர்கள் சிறிதேனும் சந்தேகமாவது, அவநம்பிக்கையாவதின்றிக் காங்கிரசுக்கு மகத்தான வெற்றியைக் கொணர்ந்து கொடுத்தார்கள். அதை அனைவரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இந்தியாவிலுள்ள பல பிரமுகர்களும், வெளிநாட்டில் இந்தியாவை மரியாதையுடன் நடத்த வேண்டுமென்று எண்ணங்கொண்ட அறிவாளிகளும் காங்கிரஸ்தான் இந்தியர்களின் நன்மைக்காகப் பாடுபடும் பெரிய கக்ஷி என்று வெளிப்படையாகச் சொல்லிவருகிறார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குக் காங்கிரஸின் சக்தியும், லக்ஷக் கணக்கில் உடல், பொருள் ஆவி அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராகயிருக்கும் புண்யாத்மாக்கள் காங்கிரஸில் தயாராக விருக்கிறார்களென்பதும், சுதந்திர தாபம் நாளுக்கு நாள் அதிகமாகக் கொண்டே வருகிறதென்பதும் நன்றாக அறிந்த விஷயம். ஆனால், பிரிட்டிஷ் ஏகாதிபதயத்தின் மகிமையையும், மாட்சியையுமே அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசாங்கம் எங்ஙனம் உறுதிமொழி கொடுக்கும்? இந்திய அரசியல் திட்டத்தைப் படித்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எப்படி பாதுகாக்கிறார்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. ஏதாகிலும் இந்தியர்களுக்கு நன்மை காணப்பட்டால் அது எஜமானன் வேலைக்காரன் என்ற எண்ணத்துடனேயே கொடுக்கப்பட்டது போல் தென்படுகிறது. வேலைக்காரன் எஜமானனைத் திருப்தி செய்வதாக விருந்தால் எஜமானன் நல்லவனுயிருப்பதுபோல் சொல்லுகிறார்கள். இந்த அடிமைத்தனத்தையே போக்கடிக்க உறுதிமொழி கொடுங்கள் என்று காந்திஜி கேட்கச் சொன்னார்.

காங்கிரஸ் உறுதி மொழி பெறுமல் அதிகாரம் கிடைத்தவுடன் ஒத்துக்கொண்டிருந்தால் சில நன்மைகள் செய்திருக்கலாம். அதுவும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. பொது ஜனங்களின் நன்மைக்காக ஏதாவது செய்தால் அதைக் கவர்னர்கள் பலமுறை யோசித்தே ஆமோதிப்பார்கள். நில வரி விஷயத்தை எடுத்துக்கொள்வோம். உண்மையாக எவரேனும் கிராமவாசிகளின் துன்பத்தைப் போக்கடிக்க எண்ணங்கொண்டால், தற்சமயம் வசூலிக்கப்படும் நிலவரியில் பாதியைத்தான் விதிக்கலாம். அதற்குத் தைரிய முண்டா? கவர்னர்கள் இவ்விஷயங்களில் அவசியம் தலையிடுவார்கள். காங்கிரஸின் முக்யமான 'குடியை யொழித்தல்' கொள்கை

யைக் கவர்னர் ஆமோதிப்பது துர்லபம். பொது ஜனங்களுக்கு நன்மை செய்யப் பாடுபடும் போது ஒவ்வொரு அடியிலும் கவர்னர் விசேஷ அதிகாரத்தைக்கொண்டு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருந்தால் என்ன செய்வது ? கவர்னர்களை நம்பவேண்டுமென்று புத்திமதி பிறப்பது இந்தியாவில் தொண்டு தொட்டு வரும் பழக்க வழக்கங்களைக் கவனிக்காததற்கு ஒப்பாகும். இந்தியர்களைப்பற்றி ஆங்கிலேயர்களுக்கு என்ன தெரியும் ? அவர்கள் படும் கஷ்டமும், லக்ஷக்கணக்கில் வாடி வருந்திக் கொண்டிருக்கும் குடிபானவர்களும் அவர்களுக்கு லக்ஷியமா? இந்தியா பிரிட்டனுக்கு ஒரு கறவை மாடு மாதிரி. ஆயிரக் கணக்கில் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டு, அதிகார தோரணை செலுத்திவிட்டு, ஓடிப்போய் விடும் துரைத்தனத்தார்களின் மனதையும், போக்கையும் மாற்றுவதின் பொருட்டே மகாத்மா காந்தி உறுதிமொழி கேட்டார். சிறிய நன்மைகளை யுத்தேசித்தே காங்கிரஸ் பதவி ஏற்றுக்கொள்ள முன் வரவில்லை. அம்மாதிரி நன்மைகள் எந்த மந்திரியும் செய்யலாம்.

இவ்விஷயங்களைப் பற்றி அனைவரும் ஏகோபித்த மனதுடன் காங்கிரஸின் கொள்கையை ஆமோதிக்கிறார்கள். இடைக்கால மந்திரிகளைப் பற்றிக் கவலைப்படுவதில் பிரயோஜனமில்லை. அவர்கள் எச்சமயத்திலும் பதவி வேட்டையாடுபவர்கள் என்பது தெரிந்த விஷயமே. தேசத்ரோகிகள் எந்நாட்டிலும் இருந்துகொண்டிருப்பார்கள். அதுவும் இந்தியா போன்ற அடிமை நாட்டில் இம்மாதிரி விட்டுக்கொடுக்கும் ஆசாமிகளைக் கொண்டு அன்னிய நாட்டார் நம்மை ஆண்டு வருவது சகஜம். இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தால்தான் இத்தீமைகளைப் போக்கடிக்க முடியும். இடிந்து கெட்டுப்போன வீட்டில் வௌவால்கள் அவசியமிருக்கும். நாம் வீட்டை சரிப்படுத்தினால் வௌவால் தானே ஓடிப்போய்விடும். கட்டிடத்தைச் சரிப்படுத்துவதே நமது முக்யமான வேலை. பொது ஜனங்கள் விழிப்போடு தினசரி மாறுதல்களைக் கவனித்தல் அவசியம்.

## புத்தக விமர்சனம்

### தேன் ஈ வளர்ப்பு

**ஸ்ரீமான். S. கோபால கிருஷ்ணன் எழுதியது.**

(மகாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், சென்னை)

வறுமைப் பிணியால் வாடித் தவிக்கும் நம் நாட்டினருக்கு, அதிக மூலதனம் இல்லாமல் தொழில் செய்து கால் வயிற்று கஞ்சிக்காவது உதவக்கூடியது சர்க்கா என்பது யாவரும் அறிந்ததே. அதைத் தவிர தேனீ வளர்த்தல் மிகவும் லாபகரமானது என்பது சில வருஷங்களாகச் செய்துள்ள ஆராய்ச்சியினால் தெரிகின்றது. இத்தனை முக்கியமான விஷயத்தைப் பற்றி, தனது சொந்த அநுபவ ஞானத்துடன், புதிய முறையில் இந்நூலாசிரியர் எழுதியுள்ள இச்சிறிய புத்தகம் யாவரும் வரவேற்கத்தக்க முறையில் நிறைய படங்களுடன் சுலபமான நடையிலிருக்கிறது. பணக்காரர்களும் தமது சொந்த உபயோகத்துக்கு வேண்டிய தேனை தங்களது தோட்டத்திலேயே உற்பத்தி செய்துகொண்டால் மிகவும் குறைந்த செலவில் பரிசுத்தமான தேனை அடையலாம். மிகவும் முக்கியமான இத்தொழிலில் ஆர்வமுள்ளவர்கள் யாவரும் இதைப் படிக்க

வேண்டியது அவசியம். விலை குறைவு; உயர்ந்த பேப்பரில் அச்சிடப் பட்டுள்ளது.

விலை அணு 4.

"ஜகன்மோகினி" ஆபீஸில் கிடைக்கும்

---

# டாக்கி விமர்சனம்

## சிந்தாமணி

"சிந்தாமணி" கதையில் இரண்டு உண்மையான பக்தர்கள் கிருஷ்ணனடி பணிவதாக அறிகிறோம். "சிந்தாமணி' படத்தைப் பார்த்ததும், இரண்டு உண்மையான நக்ஷத்திர நடிகர்கள் புதிதாக தமிழ்ப் பட உலகுக்கு வந்திருப்பதைக் கண்டு சந்தோஷிக்கிறோம். தமிழ்ப் படங்களில் நடிப்பதற் கென்றே அச்வத்தம்மாவும், Y. V. ராவும் சமீபத்தில் தமிழ்ப் பாஷையைக் கற்றுக்கொண்டு இவ்வளவு நன்றாக நடித்திருப்பதானது மிகவும் போற்றத்தக்கது.

நடிப்பில் முதல் ஸ்தானத்தை ஸ்ரீமான் Y. V. ராவ்தான் அடைகிறார். இவ்வளவு நாள் தமிழ்ப் படங்களில் கதாநாயகன் வேடத்தை நடிக்க K. P. கேசவனும். M. K. ராதாவும்தான் பிரபலமாயிருந்தனர். இப்போது திடீரென்று எல்லோரையும் பரவச முறச்செய்யும் இயற்கையான நடிப்புடன் ஸ்ரீமான் Y. V. ராவ் தோன்றி யிருக்கிறார். சிறிதும் சிரமமில்லாமல் "நாம் காமிரா முன் நடிக்கின்றோம். இது உண்மை வாழ்க்கைச் சித்திரமல்ல'' வென்று நினையாமல், வெகு இயற்கையாக ஸ்ரீமான் ராவ் நடித்திருக்கிறார். இந்த அம்சத்தில் இவரை ப்ரடரிக் மார்ச் என்னும் பிரபல மேனாட்டு நடிகருக்கு ஒப்பிடலாம். சீக்கிரம் மார்ச்சுக்குள்ள கௌரவத்தை தமிழ்ப்படவுலகில் இவர் அடைவார் என்றும் எதிர்பார்க்கலாம். அடுத்தபடியாக ஸ்ரீமதி அச்வத்தம்மா கூடிய வரையில் நன்றாய் நடித்திருக்கிறார். Y. V. ராவ் கதாநாயகனுகவும், அச்வத்தம்மா கதாநாயகியாகவும் ஒரு சமூகப் படத்தில் நடித்தால் 'ஜோடி' மிகவும் பொருத்தமாக விருக்கும் என்று நம்ப இடமிருக்கிறது. நடிப்பில் அடுத்த ஸ்தானம் மிஸ் ரங்கநாயகிக்குத் தான் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அவர் நாளுக்கு நாள் விருத்தி யடைந்து வருகிறார் என்பதற்கு சுசீலையின் பாகம் தான் அத்தாட்சி. ஸ்ரீமான் தியாகராஜ பாகவதரின் நடிப்பு பில்வமங்களின் அகக் கண் திறந்த பின்புள்ள பாகத்தில் தான் ஜீவனுடன் விளங்குகிறது. காமேடியன் நாராயண ராவ்

பல விடங்களில் அதியாக நடிக்கிறார்; இவர் N. S. கிருஷ்ணன் கோஷ்டியைச் சேர்ந்தவர் போலத் தோன்றுகிறது. "சுமார்" என்னும் ரகத்தில் பலர் நடித்திருக்கின்றனர்.

சங்கீதத்தைப்பற்றி எழுதும்போது, இப்படத்தில் பாட்டுகள் மிகவும் அதிகம் என்று சொல்லாமலிருக்கமுடியாது. தியாகராஜ பாகவதருக்கு எடுத்ததற்கெல்லாம் பாட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் ஒரு பாட்டுகூடப் பாடாமலே நன்கு சோபிக்க முடியுமென Y V. ராவ் நிரூபிக்கிறார். ஆழ்வார் செட்டி மீனாட்சியுடன் சங்கீத தர்க்கம் செய்வது அனாவசியம்......பாட்டுகள் கவனம் செய்திருப்பதானது மிகவும் உயர்ந்த முறையிலுள்ளது. "நாடகமே உலகம்" "பஜனை செய்வோம்" முதலியவைகளை உதாரணமாய் எடுத்துக்கொள்ளலாம். இம்மாதிரி 12 அல்லது 15 உடன் நிறுத்திக்கொண்டிருக்கலாம்.

குறைகளை நோக்குமிடத்தில், கதை அனாவசியமாக வளர்த்தப்படுகிறது. 3 மணி நேரத்திற்குமேல் படம் நடக்கிறது. ஆழ்வார் செட்டியுடன் சம்பாஷணை அனாவசியமாக வளர்த்தப்பட்டிருக்கிறது. ஆழ்வார் செட்டி திருப்பவும் இரண்டாவது முறை வந்து மீனாக்ஷியுடன் தர்க்கம் செய்வது இல்லாமலிருந்திருக்கலாம். "சிந்தாமணி" கதை நடந்ததாகச் சொல்லும் காலத்தில் பொடி போடும் வழக்கம் இருந்ததென்று இதில் காட்டியிருப்பதானது ஒப்புக்கொள்ளக் கூடியதாயில்லை. சுமார் 30 வயதுள்ள "தாய்க் கிழவி" தடி யூன்றுவதைப் பார்த்தால் சிரிப்புதான் வருகிறது. ஆழ்வார் செட்டி தலையை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளட்டும். அவர் அளவுக்கு மீறி தலையை ஆட்டி பல்லைக் காட்டுகிறார். ஒலிப் பதிவு அவ்வளவு திருப்திகரமாக வில்லை பல இடங்களில் உச்சஸ்தாயியில் பாடும்போதும், சில இடங்களில் சாதாரணமாகப் பேசும்போதும் ரிகார்டிங் சரியாயில்லை. "பாக்கிய சக்ரா" விலிருந்தே நிறைய மெட்டுகள் எடுத்திருக்கிறார்கள். கர்நாடக சங்கீதத்தில்—அதுவும் ஸ்ரீமான் சிவன் பாடல்களை இயற்றுகையில்—நல்ல மெட்டுகள் நிரம்ப அகப்படாது போலும்.

மேற்கண்ட சில குறைகளிருந்தாலும், மொத்தத்தில் படம் நன்றாக இருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.

இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு எழுந்து வரும்போது, "Y. V. ராவும், அச்வத்தம்மாவும் முக்கிய பாகம் தரித்து நடிக்கும் உயரிய கதைப்போக்குள்ள சமூகப்படம் என்று வெளிவரும்?" என்றே தோன்றுகின்றது. தமிழ்ப்பட உலகந்தான் முன்னேற ஆரம்பித்து விட்டதே. சற்று நிதானித்துப் பார்ப்போம்.

ரஸிகன்.

## ADVERTISEMENT RATES

| | | |
|---|---|---|
| Rs. 12 for full page | | Rs. 6-8 for half page |
| Rs. 15 „ „ „ | Inner wrapper | Rs 3-8 quarter page |

SPECIAL RATES FOR CONTRACT ADVERTISEMENTS

"JAGANMOHINI" OFFICE.

*Triplicane, Madras*



வெளி வந்துவிட்டது! விற்பனைக்குத் தயார்!!

# மந்தாகினி

அல்லது

## கிராமத் தொண்டு

ஸ்ரீமான் M. C. ஸ்ரீனிவாஸன் M. A. B. L

எழுதியது

விலை அணா **8**. தபாற் செலவு அணா **1**

முன் பண மனுப்பவும். வி. பி. கிடையாது

**வத்ஸா கம்பெனி,**

திருவல்லிக்கேணி, சென்னை.


---

## ஸரஸராஜன்

கதம்பமாலையின் முதற் பதிப்பு செலவழிந்து விட்டதால், இரண்டாம் பதிப்பில் இதன் முதற் கதையாகிய "ஸரஸராஜன்" என்பதைத் தனிப் புத்தகமாக அச்சிட்டிருக்கிறோம். மற்ற கதைகளுடன் இன்னும் சில புதிய சிறு கதைகளைச் சேர்த்து "கதம்பமாலை"யை தனியாக வெளியிட உத்தேசித்துள்ளோம்.

சில்வானம் விற்றுப் புருஷருக்குத் தெரியாமல் பணம் சேர்த்து, நகைப்பித்து பிடித்துத் தறிதலைகளாய்த் திரியும் பெண்களின் கதி என்னவாகும் என்பதை நன்கு விளக்கிக் காட்டும் இச் சிறிய நாவலின் விலை அணா **4** தான். ஸ்டாம்பாகவோ, அல்லது வேறு புத்தகங்களும் வேண்டுமானால் அவற்றின் விலையுடன் சேர்த்தோ அனுப்பவும்.

## பரிசுகளின் விவரம்

1937 ௵ எப்ரல் ௴ 20 தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| பரிசு | ரூ. | சந்தா ந. |
|---|---|---|
| 1 | 5 | N. 294. Mr. C. R. Naidu, Vizianagaram. |
| 2 | 5 | S. 1008. Mr. V. Souriraja Iyengar, Tirukkannapuram. |

மே மாதம் 20ந் தேதிக்குள் சந்தாவை அனுப்புவோரது நம்பர்களையும் குலுக்கிப்போட்டு 2 சீட்டுகளை எடுத்து, ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 மதிப்புள்ள புத்தகங்கள் இனாமாகக் கொடுக்கப்படும்.

மானேஜர்

# கவிதாமண்டலம்:

## புது வருஷப் பா!

புதிய வருடப் புதுப்புனல் ஓங்கக்
கதிரவன் உற்ற காட்சியைக் கண்டு
ஞாலத்து உயிர்கள் நல முறக் களிப்ப
ஆலத்திலை மீது அரும் பெறற் குழவியாய்
அருந்துயில் கொள்ளும் அமலன்தாள் மலர்

பொருந்திய அன்பால் யாவரும் போற்றுக
திருந்தும் செங்கோல் சிறப்புடன் வாழ
அறமும் பொருளும் அன்புடன் இன்பும்
மறமற வேண்டுவர் மானிடர் எவரும்
இன்பம் அடைய விரும்புவர் யாவரும்

துன்பம் நீங்கத் துயர்பல பொறுத்தல்
ஆடவர்க் குரியதே யாயினும் அவர்க்குப்
பாடுகள் பலவும் படிந்திருத் தலினால்
கடமையை முடிக்கக் கருதினும் இயலாது
அன்னவர் தொழிலை யன்பே யுருவாய்த்

துன்னிய மடவீர் துகளறச் செய்யும்
உரிமை யுமக்கே உதவிய இறைவன்
கருதிய உள்ளக் கருத்தை முடித்தல்
பெருமை முயல்வழி யாதெனில் பிறி தொன்றாகா
இருமையும் அடைந்தே இன்புற நாங்கள்

அருமையாம் உங்கட்கு ஆசிகூறு தலை
தகுதியென்று அறிந்து தயங்குவதன்றி
மிகுதுயர் நெஞ்சில் மீக்கொளும் தன்மையை
மாற்றுதல் உங்கள் மகிமையே யாகும்
போற்றுதல் உங்களைப் புருடர் கடமையா

எண்ணினம் உங்கள் இயற்குணம் வாழி!
திண்ணிய நிறையும் திருவுடன் வாழி!
பண்ணியல் மொழியும் பழிப்பறு குணமும்
கண்ணிய மதியும் கறையறும் செயலும்
மண்ணும் விண்ணும் மகிழ்வுற வாழி!
வண்மையும் அன்பும் வாழி! வாழியவே!!

13-4-1932 —திரு. ராகவாசாரியர்.

# உதிர்ந்த மணிகள்

## இந்தியர் கடமை

காங்கிரஸ் ஒன்றுதான் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனம். அதில் சேராதவர்கள் இந்தியாவில் சேர்ந்தவர்களெனச் சொல்லிக் கொள்ள முடியாது. —டாக்டர். முகமது ஆலம்

## காங்கிரஸ் பக்தி

எனக்கும் காங்கிரஸுக்கும் சிற்சில சமயங்களில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அவ் வேற்றுமைகள் எனது காங்கிரஸ் விஸ்வாசத்திற்கு ஒரு போதும் தடையாக இருந்ததில்லை. அவை எனது விஸ்வாசத்தைக் குறைக்கவில்லை. வேற்றுமைக்காக நான் காங்கிரஸை விட்டு ஒரு போதும் வெளியே போனதில்லை. —மாளவியாஜி.

## ஸனாதனிகள் ஆதரவு

தயவென்பதின்றி கடமை யென்று நினைத்தே ஸனாதன தர்மிகள் காங்கிரஸை ஆதரித்திருக்கின்றனர்.

—கோஸ்வாமி கணேச தத்தர்

## தேசீய உணர்ச்சி

வகுப்பு வாதம் என்ற சாம்பல் தேசீய உணர்ச்சி என்ற நெருப்பு மீது படிந்திருக்கிறது. இதனைக் கிளறிவிட சிறிது முயற்சியே அத்யாவசியமாகும். இதனைப் போக்கினால் தேசீய உணர்ச்சி கொழுந்து விட்டெரியும்படிச் செய்வது மிக்க சுலபமாகும். —மோகன்லால் சாக்ஸேனா

## இனம்

வைரம் இனத்தை அழிக்க வல்லது. வைரம் ஆலகால விஷத்தினும் கொடிது. —திரு. ராகவாசாரியர்

## நம் லக்ஷ்யம்

எதிர் காலத்தில் நமக்கு முன்னைவிட அதிக சேதத்தை விளைவிக்கக்கூடிய விபத்துக்கள், பூகம்ப அதிர்ச்சிகள் நேரக்கூடும். என்ன நிகழ்ந்த போதிலும் சரி, நாம் சுயேச்சை லக்ஷ்யத்தை அடையும் வரை முன்னேறிச் செல்வோம்.

—ராஷ்டிரபதி ஜவஹர்

## நமது விழிப்பு

முஸ்லீம்கள் முஸ்லீம் தலைவர்களுக்கே அதிக ஸ்வாதீனமென்று நாங்கள் மதித்து வந்தோம். ஆனால், கொஞ்சம் பிரசாரம் செய்திருந்தாலும் முஸ்லீம்கள் ஹிந்துக்களைப்போன்றே நடந்திருப்பார்களென்று எனது சுற்றுப் பிரயாண அனுபவத்தில் கண்டு கொண்டேன். —ராஜேந்திர பாபு

# தினசரி தமாஷ்

## ' போய்—போல் ' ஆன விநோதம்

இந்த மாத மத்தியில் டார்ஜீலிங்குக்குப் புதிய மந்திரிகள் போல் அங்கு ஜூன் மத்திவரை இருப்பார்களெனத் தெரிகிறது.

## புது விதமான விகிதமா ?

ஒரு வீட்டில் 29 பேர்கள் இருக்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில் மாணவ விகிதம் அதிகமாக இருப்பதில் ஆச்சரியமில்லை. மரண—மாணவ என்று மாறியதேன் ?

## யாருக்குப் போறுப்பு!

ஸர். கே. வி. ரெட்டி யாருக்குப் பொறுப்பு என்று நான் கேட்கிறேன்.

## ' அவர்—இவர் ' ஒருவரா ?

இந்தக் கூட்ட முடிவு முதல் அவர் கவர்ன்மெண்டு பிரதம கொறடாவாக வேலை பார்க்கும் உத்தேசத்துடன் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## ' புதுவிதக் கமிட்டியா ? '

ஸ்ரீ. எம். ஜி. பட்நாயக்கும் (மாஜி எம். எல். ஸி. ) பர்லாக கமிட்டி மகாராஜாவும், லதிபுர் ரஹமானும் ஒரிஸா ' மந்திரிகள். பர்லாக்மிடி மாறிய மாதிரியைப் பாருங்கள்.

## " பரிபாலனம்—பானம் " ஆயிற்று ?

வெள்ளையர் இல்லாவிடில் செல்வ பரிபானம் சீர் கேடடைந்து விடும் என்று சொல்லிய ஸர். கே. வி. ரெட்டி ஏன் வெள்ளையரைச் சேர்த்துக்கொள்ளவில்லை ?

## கூட்டமும் சட்டமும் ஒன்று ?

" சாதாரண கூட்டத்தை அமுல் நடத்தும் தோரணையில் இது கமிஷனரால் வெளியிடப்பட்டது. "

## விஜயமும் விஷயமும்

ஸ்ரீமதி விஷய லக்ஷ்மி பண்டிதரும் ஸ்ரீமதி இந்திராவை வரவேற்க வந்திருந்தார்.

## கேட்டதுண்டா ?

நிலவரி வஜா, கிஸ்தி வஜா, போதுமான பண சகாயம் தாராளமாக தற்காவிக் கடன் கொடுப்பதுபோன்ற பல முறைகள் வேண்டும்.

[குறிப்பு : ஒரு பிரபல தமிழ்த் தினசரியிலிருந்து ' வழிப்போக்கன் ' திரட்டியவை இவை.]

# காந்திஜியின் வேண்டுகோள்

## 'விளையாட்டுக்குக் கூட இவ்விதம் கூறுதீர்கள்'

### காந்தி சேவா சங்க ஆரம்ப விழா பிரசங்கம்

" நான் இந்த இடத்திற்கு வந்துகொண் டிருந்தபோது 'பேய்ஸ்பூரில் ஜவாஹர்லால் காங்கிரஸாச்சு ; ஹட்லியில் இனிமேல் காந்தி காங்கிரஸ் ஆரம்பமாகப் போகிற தென்று யாரோ சொன்னர்கள்.

இதைச் சொன்னவர் மனதில் வினை வைத்துச் சொல்லி யிருக்கமாட்டார். ஆயினும் இந்த வார்த்தை என்னை எவ்வளவு வேதனைப் படுத்தியது தெரியுமா? வேடிக்கையாகக் கூட எங்களிருவருக்கும் போட்டியிருப்பதாகவோ அல்லது இந்த இரு ஸ்தாபனங்களுக்குப் போட்டி யிருப்பதாகவோ ஜனங்கள் சொல்வார்களென்று நான் நினைக்கக்கூட வில்லையே! இந்த ஸ்தாபனம் காங்கிரஸையோ! அல்லது ஸ்ரீ. நேருவையோ எதிர்த்து ஆரம்பிக்கப்படவில்லை" என்று காந்திஜி, சேவா சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டத்தை ஆரம்பித்து வைக்கையில் கூறினர்.

*மேலும் பேசுகையில் " சங்கத்தின் முக்கிய நோக்கம் காங்கிரஸின் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதே. இதனல் இது காங்கிரஸின் போட்டி ஸ்தாபனமாகாது. சத்யம், அஹிம்ஸை ஆகிய கொள்கைகளைக் கடைப்பிடித்து மனுஷ்ய சமூகத்திற்கு சேவை செய்வதென்பதே சங்கத்தின் நோக்கமாகும்.*

*சங்கத்தின் பெயர் ஒரு தனிப்பட்ட நபரைப் போற்றுதலுக்கு அறிகுறியாகக் காணப்படுவதால் பெயரை மாற்றி யமைக்கலாமென யோசனை கூறுகிறேன்.*

*இந்தச் சங்கம் கொள்கைகளை தொழுமே யொழிய தனிப்பட்ட நபர்களை வணங்காது " என்றார்.*

*சங்கத்தின் பூர்வ சரித்திரத்தை கூறுகையில் 1920ம் வருஷம் இச்சங்கத்தினரிடம் நான் சில கொள்கைகளை வெளியிட்டேன். இதற் கப்புறம் கொள்கைகள் விஷயமாக மேலும் புதிய ஞானம் உதயமானது. நான் ஒரு சாதாரண மனிதன். கொள்கைக்கு முன் நான் எம்மாத்திரம்!*

நான் சில சமயங்களில் இக் கொள்கைகளைத் தப்பாகவும் வியாக்கியானம் செய்யக்கூடும். எனக்கு வயசாகிவிட்டது. தவறுகள் இழைக்க இப்பொழுது நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆகையால் சங்கத்திற்கு என்னுடைய பெயர் வைப்பது சரியல்ல. சங்கத்தின் அங்கத்தினர்களின் கடமைகள் கொள்கைகளைச் சரியாக வியாக்யானம் செய்வதுதான். என்னுடைய அர்த்தத்தையே பின் பற்ற வேண்டுமென்று இவர்களை நான் கோர மாட்டேன். என்னுடைய கொள்கைகள் தான் சத்யமான தென்ற நம்பிக்கை உங்களுக்கு இருந்தால் பின் பற்றுங்கள். சத்யமும் அஹிம்ஸையும் என்றும் உங்களைக் கைவிடா தென்பது நிச்சயம்" என்றார். (தினமணி)

## முஸ்லீம்களைக் காங்கிரஸில் சேர்க்க வேண்டியதன் அவசியம்.

### ராஷ்டிரபதியின் தாக்கீது

"நமது தேர்தல் போராட்டத்தின் போதும், அதற்குப் பின்னரும், முஸ்லிம் பாமர மக்களிடம் காங்கிரஸ் கொண்டுள்ள தொடர்பை அதிகரிப்பதன் அவசியத்தைப்பற்றி பெரிதும் விவாதம் நடந்தது. நாம் போன இடங்களிலெல்லாம், அவர்கள் நமது வார்த்தைக்குச் செவி சாய்த்தார்கள், காங்கிரஸ் செய்தியைக் கேட்க அவர்கள் ஆவலுடன் முன் வந்தனர். நமது சுதந்திர இயக்கத்துடன் அவர்களும் கலந்துகொள்ள ஆர்வமுடையவர்களாய்க் காணப்பட்டனர். ஆனால், நாம் முந்தி வேலை செய்யாததினாலும், நல்ல பயிற்சி பெற்ற முஸ்லீம்கள் கொஞ்சம் பேர்களே இருப்பதனாலும், இந்த புதிய ஊக்கத்தையும், விழிப்பையும் நம்மால் பூரணமாக பயன் படுத்திக் கொள்ள முடியாமற் போய்விட்டது. அதிலிருந்து இது விஷயத்தை பிரபலமான காங்கிரஸ்காரர்கள் தீவிரமாக யோசித்தனர். முஸ்லிம் அங்கத்தினர்களைப் பதிவு செய்வதில் நாம் விசேஷ கவனம் செலுத்தவேண்டியது அவசியமென்றும், ஏனெனில் நமது சுதந்திரப் போராட்டம் அப்போது இன்னும் பரந்ததாகுமென்றும், முஸ்லிம் பாமர மக்களும் அதில் முக்கியத்துவத்தை வகிக்க வேண்டுமென்றும், அது அவர்கள் கடமையென்றும் நாங்கள் உணர்ந்தோம்.

"தேசத்தின் முன்பு தாண்டவமாடும் சுதந்திரம், வறுமையை அகற்றுவது, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய முக்கிய பிரச்னைகளைப் பார்க்கையில், முஸ்லீம் பாமர மக்கள்,

ஹிந்து பாமர மக்கள், சீக்கிய பாமர மக்கள், கிறிஸ்துவ பாமர மக்கள் இவர்களுக்கிடையில் ஒரு வித்தியாசமு மில்லாதிருப்பது உண்மை.

விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய பணக்காரர்களை நினைக்கையில்தான் வித்தியாசம் மேலுக்குத் தோன்றுகிறது. சிநேக பாவத்துடனும், எப்போதும் தாராள, பரந்த நோக்கத்துடனும் அணுகப்பட்டால், இந்த வித்தியாசங்களைக் கூட சரிக்கட்டி விடலா மென்பதில் சந்தேகமே கிடையாது.”

---

சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலைப்பற்றிய புள்ளி விவரங்களையும் தங்கள் ஷராக்களையும் சர்க்கார் பிரசுரித்திருக்கிறார்கள். அதிலிருந்து முக்கியமான பகுதிகளை யெடுத்துக் கீழே தருகிறோம்.

## மேல் சபை

மேல் சபைக்கு மொத்தம் ஜாப்தாவிலுள்ள வோட்டர்கள் 24,979. போட்டியில்லாமல் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்தானங்கள் 5. மற்ற 41 தொகுதிகளில் வோட்டர்கள் 21,219. இவற்றில் 17,142 (80%) வாக்களித்தனர்.

போட்டியுள்ள தொகுதிகளில் ஸ்திரீ வோட்டர்கள் 2,578. அவர்களில் 1,425(55%) வோட்டளித்தனர். மொத்த அபேட்சகர்கள் 102. இதில் 33 சுயேச்சை, 31 காங்கிரஸ் 15 ஜஸ்டிஸ், 11 ஜனநாயகக் கட்சி. மற்றவர்கள் 12.

11 பேர் ஜாமீன் பறிகொடுத்தனர். இவர்களில் 5 ஜனநாயகக் கக்ஷி, 6 சுயேச்சை.

## வோட் விவரம்

| | கிடைத்த வோட் | விகிதாசாரம் % | கிடைத்த போட்டி ஸ்தானங்கள் |
|---|---|---|---|
| காங்கிரஸ் | 18,330 | 54·3 | 23 |
| ஜஸ்டிஸ் | 5,126 | 15·2 | 5 |
| ஜனநாயகம் | 2,536 | 7·5 | 1 |
| சுயேச்சை | 5,809 | 17·2 | 9 |
| முஸ்லிம் லீக் | 459 | 1·4 | 3 |
| மற்றவர்கள் | 1,507 | 4·4 | |
| மொத்தம். | 33,787 | 100 | 41 |

# மாகாண அசெம்பிளி

மாகாண அசெம்பிளிக்கு எல்லா பிரதேசத் தொகுதிகளிலுமாகச் சேர்ந்து மொத்த வோட்டர்கள் 61,73,738. 18 ஸ்தானங்களுக்குப் போட்டியில்லை. 169 ஸ்தானங்கள் தான் போட்டிக்கு வந்தன. அவற்றில் மொத்த வோட்டர்கள் 58,82,711. இதில் 30,39,129 (52%) வோட்டுக் கொடுத்தனர்.

போட்டி தொகுதிகளில் மொத்த ஸ்திரீ வோட்டர்கள் 4,53,622 (31%, வோட் அளித்தனர்.

மொத்தம் தேர்தலுக்கு நின்ற அபேட்சகர்கள் 500. ஜாமீன் இழந்த விவரம் பின்வருமாறு :—

| கக்ஷி | நிறுத்திய அபேட்சகர்கள் | ஜாமீன் பறிமுதல் |
|---|---|---|
| காங்கிரஸ் | 173 | 1 |
| சுயேச்சை | 125 | 38 |
| ஜஸ்டிஸ் | 120 | 21 |
| ஜனநாயகம் | 53 | 23 |
| முஸ்லிம் லீக் | 9 | ... |
| ஹகிம் கக்ஷி | 7 | 1 |
| ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் | 10 | ... |
| மற்றவர்கள் | 5 | 3 |
| மொத்தம் | 500 | 87 |

# சென்னை அசெம்பிளி தேர்தல்

| கக்ஷி. | கிடைத்தவோட். | பதிவான மொத்த ஓட்டில் விகிதாசாரம். | போட்டியில் கிடைத்த ஸ்தானங்கள். | போட்டியில் கிடைத்த வெற்றி. |
|---|---|---|---|---|
| காங்கிரஸ் | 27,55,202 | 64·5% | 151 | 78·6% |
| ஜஸ்டிஸ் | 8,10,507 | 19 ,, | 17 | 8. 9 ,, |
| ஜனநாயகம் | 1,88,821 | 4·4 ,, | 1 | ·5 ,, |
| சுயேச்சை | 4,407,57 | 10.3 ,, | 13 | 6·8 ,, |
| முஸ்லிம் லீக் | 40,826 | 1 | 8 | 4·2% ,, |
| ஹக்கீம் கக்ஷி | 12,967 | .3 | 0 | — |
| மற்றவை | 20,754 | ·5 | 2 | 1 |
| மொத்தம் | 42,69,834 | 100 | 192 | 100 |

# கரூர் கோவிலில் ரகசிய அறைகள்

## கலயங்களும் அகப்பட்டன

புராண காலத்திலிருந்தே ஏற்பட்டுள்ள கரூர் ஸ்ரீ அபயப்பிரதான ரங்கநாத ஸ்வாமி கோவிலானது (ஸ்ரீ முசுகுந்த சக்கரவர்த்தியால் ஜீரணோத்தாரணம் செய்யப்பட்ட பின்பு) தற்பொழுதுதான் தேவஸ்தனக் கமிட்டியாரால் பழுது பார்க்கப்பட்டு வருகிறது. கண்டிராத புதுமைகள் இக்கோவிலில் இப்பொழுது காணப்படுகின்றன. இப்படிப்பட்ட பண்டைய கோவில்கள் புதுப்பிக்கப்படும்பொழுது, ரகஸிய பாதாள அறைகளும், வழிகளும், ஏராளமான திரவியங்களும் இருந்திருப்பதாக சரித்திரங்களில் நாம் படிக்கின்றோம். அதேமாதிரி இக்கோவிலிலும் அநேக பாதாள அறைகளும், வழிகளும் இருப்பதாக இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் இருபது நாட்களுக்கு முன் மேற்படி கோவிலின் மேல்கட்டிடத்தைப் பிரித்தபொழுது பொக்கிஷ அறைக்கு வட புறமாக ஒரு நடவை தெரிந்தது. அந்த நடவையின் தரையில் ஒரு பிடியுடன் கூடிய வட்டமான கல்மூடி தென்பட்டது. இந்த மூடிதான் மேற்படி ரகசிய பாதாள அறைக்கு வாயிற் கதவு என்று அனைவரும் கருதுகிறார்கள். இதைத் தவிர சில மாதங்களுக்குமுன் மதராசிலுள்ள புராதன வஸ்துக்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் கழகத்தைச் சேர்ந்தவர் இது விஷயமாய் இங்கு விஜயம் செய்தபோது, கோவில் கோபுரத்தில் ஐந்து கலயங்களைக் (காலியாய்) கண்டெடுத்து அதை ரஸாயனப் பரீக்ஷைக்காக மதராஸுக்கு அனுப்பியிருக்கிறார். அதைத் தவிர அம்மன் கோவிலில் தளவரிசை பழுது பார்த்த பொழுது, தரைக்குள் ஒரு பாதாள ரகசிய அறை இருப்பதைப் பார்த்ததாகவும் சொல்லப்படுகிறது. தரை மேலே பரப்பியிருக்கும் ஒரு கல்லைப் புரட்டிப் பார்த்தபொழுது உள்ளே இருட்டாக இருந்ததாம். சிறு கல்லைப் போட்டு பார்த்ததில் கணீரென்று உலோக சப்தம் கேட்கின்றதாம். உள்ளே விக்கிரங்களும், சாஸனங்கள், பாத்திரங்களும் இருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது. அதை ஆராய்ந்து பார்க்கப் பயந்து கல்லை மூடிவிட்டு மேலாகப் பழுது பார்த்துவிட்டார்கள். (இந்த ரகசிய அறையிலிருந்துதான் இவ்வூரிலுள்ள பசுபதி ஈசுவரன் கோவிலுக்குப் போவதற்கு பாதாள வழியிருப்பதாக ஸ்காந்த புராணத்தில் சொல்லப்படுகின்றது.)

(தினமணி)

# 1935-6ல் சென்னை மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி

1935-36 வருஷத்தில் சென்னை மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியைப்பற்றி கல்வி இலாகா டைரக்டர் சமர்ப்பித்திருக்கும் அறிக்கையில், ஆரம்ப பாடசாலைகள் குறைக்கப்பட்டதால் மாகாணத்தில் உள்ள மொத்த கல்வி ஸ்தாபனங்களின் எண்ணிக்கை 50,391ல் இருந்து 50, 116 ஆக குறைந்து விட்டது என்று கூறப்படுகிறது.

ஆனால் அவற்றில் வாசிப்பவர்களின் தொகை 3,053,446ல் இருந்து, 3,133,426 ஆக உயர்ந்தது. இவ்வுயர்வு எல்லா கிரேட் பாடசாலைகளிலும் இருந்தது.

தனிப்பட்டவர் அதிகாரத்தில் உட்பட்ட பாடசாலைகள் தொகை 1,171ல் இருந்து 1,191 ஆக உயர்ந்திருக்கிறது. ஆனால் அவற்றில் வாசிப்பவர் தொகை 40,757ல் இருந்து 40,554 ஆகக் குறைந்தது.

பொது நிர்வாகத்தின் கீழும், தனிப்பட்டவர்கள் அதிகாரத்திற்குள்ளும் உள்ள பாடசாலைகள் எல்லாவற்றின் தொகை **255**ஆகக் குறைந்தது. அதில் வாசிப்பவர் தொகை **79,777** ஆக உயர்ந்தது.

மொத்த ஜனத் தொகையில் **6.8%** கல்வி பெற்று வருகின்றனர். அதில் ஆண்கள் **9.9%** பெண்கள் **3.8%** அதற்கு முந்திய வருஷம் **6.6%** (ஆண்கள் **9.7%** பெண்கள் **3.6%**)

இவ்வருஷத்தில் கல்விக்காக ரூ. 551.51 லட்சம் செலவு செய்யப்பட்டது. முந்திய வருஷம் ரூ 540. 94 லட்சம் செலவாயிற்று.

மொத்த தொகையில் சர்க்கா நிதியிலிருந்து செலவான விகிதம் 7[illegible]; தனிப்பட்டவர் நிதியிலிருந்து செலவானது 39.

ஸ்ரீ

# மாயப்ரபஞ்சம்



## 1-வது அதிகாரம்

### அறிவுப் பிரசங்கம்—அதிகப் பிரசங்கம்

"தாதாவுக்கு எப்படி இருக்கிறது? இப்போது முற்றிலுங் குணந்தானே......எங்கேயோ புறப்படுவது போலிருக்கிறது.........நான் தடையாக வந்

தேனே?......என்று நகைத்துக்கொண்டே சுமார் 28 வயது மதிக்கக் கூடிய ஓர் அழகிய வாலிபன், எழிலே உருக்கொண்டாற்போல் நிற்கும் அங்கனமணியைக் கேட்டான்.

"இல்லே! இல்லே......தடை யொன்றுமில்லே. தாதா மோரு சாப்பிடலாமா என்று நேற்று முதல் கேட்கிறார். நானே உங்களிடம் வந்து கேட்க நினைத்தேன். தற்செயலாக நீங்களே வந்து விட்டீர்கள். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோலாய் விட்டது. தாதா மோர் சாப்பிடலாமா சொல்லுங்கள்......தாதா......டாக்டரே வந்திருக்கிறார். பாருங்கள்"......என்றாள்.

கிழவர்:—டாக்டர்வாள்...இப்படி வாங்கோ...என் முடிவு சமீபித்து விட்டது என்றே நான் தைரியமாக இருந்தேன்......ஆனாலும் சாவதற்கு மனம் வரவில்லே......ஏனெனில் என்னருமை குழந்தைகளேப் பரதேசிகளாக விட்டு விட்டுப் போறேனே என்று விசனித்தேன். மனிதனைப் படைத்த கடவுள் காக்கவும் தயாராகவிருக்கிறான் என்ற நம்பிக்கையோ பக்தியோ இத்தனை வயசாகியும் வரவில்லே பாருங்கோ......பொம்மைதான் கோபுரத்தைத் தாங்குவது போல் எண்ணி விடுவதுதான் மூட ஜனங்களின் அறிவு...... இது போலவே நானும் வேதாந்தம் தெரிந்தும் அஞ்ஞானம் கேட்கவில்லே. ஏதோ என்னைப் பிழைக்கச் செய்து விட்டீர்கள். என் சௌதாமினிக்காக இன்னும் சில காலம் இருந்து, தன்னேயும் கோகிலாவையும் காப்பாற்றிக் கொள்ளும் நிலேமைக்கு அவள் வந்து விட்டால் அதுவே எனக்குப் போதும்......

டாக்டர்!... உலகானுபவம் இன்னும் உங்களுக்கு என்னைப் போல் தெரியாது. இவ்வுலகமே வெறும் கேலிக் கூத்தாக அடித்துவிட பல பேர்கள் காத்திருக்கிறார்கள். என்னுடைய அனுபவத்தில் நான் இதுகாறும் கண்டதானது,—நியாயத்திற்கு நன்மதிப்பில்லே. நல்லோருக்கு நற்பெயர் கிடையாது. தர்மத்திற்கு மதிப்பில்லே. அயோக்யன்தான் சபாரஞ்சிதனாய் யோக்யன்போல் பலராலும் கொண்டாடப்பட்டவனாக விளங்குகிறான். சதா பாவத்தையும் அனியாயத்தையும் செய்பவர்கள்தான் பெரிய மனிதராக உலாவுகிறார்கள்.

டாக்டர்:—(இடைமறுத்து கிழவரின் கையைப் பிடித்துக் கொண்டு,) தாதா...இதென்ன இது!...உங்கள் உடல் நிலைமை தெரியாமல் பெரிய ப்ரஸங்கம் செய்யக் கிளம்பிவிட்டீர்கள். தாங்கள் இப்படி உடம்பை அலட்டிக்கொண்டால் மீண்டும் திருப்பிக்கொள்ளும்....ஜாக்ரதை....மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்....நியாய அனியாயத்தை நடு நிலைமையில் கவனித்துப் பலாபலன்களைக் கவனித்துச் செய்யவும் சர்வ வியாபியாகிய சர்வேசன் இருக்கிறான் என்பதை நம்பி இருங்கள். வீணான மனக்கோட்டையோ மனக்லேசமோ கட்டவும் அடையவும் வேண்டாம். நீங்கள் மோரு, தயிரு எல்லாம் சாப்பிடலாம். ஆனால் உடம்பை மட்டும் அலட்டிக் கொள்ளவேண்டாம்....திருப்பிக்கொண்டால் பிழைக்கமாட்டீர்கள்... சௌதாமினி!...நீ எங்கேயோ புறப்படுகிறாய்...நான் சென்று வருகிறேன்....எங்காவது கல்யாணமா? ..என்று கேட்டான்.

சௌதாமினி:—இன்று நர்ஸஸ் யூனியன் வருடாந்திர விழா... அதற்கு ஸ்ரீமதி யசோதா தேவி தலைமை வகிக்கிறார்கள்....மாலை 5 மணிக்குக் கூட்டம்...அதற்குத்தான் புறப்படுகிறேன்...

டாக்டர்:—ஓ...உங்கள் நர்ஸஸ் யூனியன் செவ்வனே நடக்கிறதா...பேஷ்....அதில் உனக்கு ஒன்றும் பங்கு கிடையாதா...

சௌதாமினி:—எனக்கு ஒன்றுமில்லை. தலைவியின் ப்ரஸங்கந்தான் முக்யமானது. என்னையும் சில நிமிடம் பேசச் சொன்னார்கள். நான் மறுத்துவிட்டேன்... எனக்கென்ன பேசத் தெரியும்? என் தொழிலை செவ்வனே செய்து த்ருப்தியடைந்தால் அதுவே எனக்குப் போதுமானது.

டாக்டர்:—ஏன் அப்படிச் சொல்லிவிட்டாய்!....“நர்ஸுகளும் பொறுமையும்” என்று நீ பேசுவதுதானே....உனக்கென்ன பேசத் தெரியாதா....சௌதாமினி! உனக்கு இத்தகைய சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் போவதற்குப் பின்னடையாதே. பேசுவதற்கும் தயங்காதே. இம்மாதிரி சமயங்களில்தான் நாம் விஷயங்களை அறிய முடியும். நமது மனத்திலுள்ளதை எடுத்துக் கூற முடியும்...சரி... நேரமாகிவிடும்...நான் வருகிறேன்...என்றான்...

அப்போது அங்கிருந்த சிறுமி கோகிலா டாக்டரை நோக்கி "டாக்டர்! இனிமே தாதாக்கு ஒடம்பு ஒன்னுமில்லையே... பொழச்சுட்டாரோன்னோ ... .... பக்கத்தாத்து பாலு என்னெ அடிக்கடி அழவெக்கரான்...தாதா செத்துப்பூடுவா. இனிமே பொழக்கமாட்டா.......ஒனக்கு இனுமே யாருமில்லென்னு சொல்ரான்....இப்படிச் சொல்லும்போதே கோகிலாவுக்கு தாதாவிடம் உள்ள அளவு கடந்த வாஞ்சையினால் கண்ணீர் வந்துவிட்டது.

டாக்டர்:—கோகிலா ... .... அதெல்லாம் ஒன்னுமில்லேம்மா! அழாதே...தாதா இனுமே சாகவேமாட்டார்...நீ தாதா பக்கத்திலேயே உட்கார்ந்து வழக்கம்போல் கதை கேளும்மா...பக்கத்தாத்து பையனோடெ சேரவே சேராதே....சௌதாமினி...நான் ஆஸ்பத்திரிப் பக்கந்தான் போகிறேன். வருகிறாயா? உன்னையங்கு இறக்கி விடுகிறேன்—என்றான்...

சௌதாமினியும் இசைந்து "தாதா! நான் போய்வருகிறேன். ...கோகிலா...தாதாவுக்கு வேண்டியதைச் செய்து ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளு. நான் இரவு 10 மணிக்கு வருகிறேன்" என்று கூறிவிட்டு டாக்டருடன் வந்து வண்டியில் ஏறிக்கொண்டாள். வண்டியும் கிளம்பியது.

டாக்டர்:—சௌதாமினீ! உன் ஆஸ்பத்திரி வேலைகள் எப்படி இருக்கிறது? முன்பு கூறினாயே அந்த நர்ஸ்கள் எல்லாம் எப்படி இருக்கிறார்கள்?...பெரிய டாக்டர் உன்னிடம் எம்மாதிரி நடக்கிறார்கள்?...

சௌதாமினி:—டாக்டர் மட்டும் என்னிடம் வெகு ப்ரியமாக முன்போலவே இருக்கிறார்கள். டாக்டரின் அன்பு அதிகமாக ஆக நர்ஸ்களின் பொறாமையும் த்வேஷமும் அதிகமாகிக்கொண்டே வருகிறது. என்ன செய்வது? அவர்களுடன்தான் வேலை செய்ய வேண்டி இருக்கிறது. அவர்களுடைய பொறாமைக்காக நான் பயப்பட்டால் பெரிய டாக்டரின் அன்பிற்குப் பாத்திரமாகாது போய்விட நேரும். ஆகையால் எதுவரினும் வரட்டும். கடவுளின் கருணைபோலாகட்டும் என்று நம்பி இருக்கிறேன்.

டாக்டர் :—சௌதாமினி! உன் பாட்டனுர் சொல்லியதுபோல் இந்த மாய ப்ரபஞ்சத்தின் விநோதங்களை—மூடுமந்திரங்களை—உலகானுபவமே இல்லாத நாம் கண்டுகொள்வதே அரிது. எதைப் பார்த்தாலும் பயங்கரம்...எதைப் பார்த்தாலும் ஆபத்து. எதை நோக்கினும் உண்மைபோலவே இருக்கிறது ஆனல் நூற்றுக்கு தொண்ணூற்ரென்பது உண்மையற்றதும், கபடமும், க்ரோதமும், பொருமையும் அலைகளைப்போல் மோதுவதாகவே இருக்கிறது.

ஒரு உதாரணம் பாரு. சென்ற வாரம் ஒரு பெரிய கேஸ் பார்க்கச் சென்றேன். ஏற்கெனவே இருந்த அவர்களுடைய குடும்ப வைத்தியர் பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்கு என்னிடம் எப்போதும் பற்றுதல் கிடையாது. நான் மருந்து கொடுத்து, ஊசி குத்திவிட்டு மற்றபடி அந்த வைத்தியரைய்ய பார்த்துக்கொள்ளும்படி நம்பிவிட்டு வந்தேன்.

அந்த மனிதர் ஏதோ ஏடாகூடம் செய்துவிட்டு நான்தான் அப்படிச் செய்ததாயும் அதனல்தான் கேஸ் விபரீதமாகிவிட்டதாயும் எனக்கு மேலுள்ள பெரிய டாக்டரிடம் கூறி அவரையழைத்துவந்து காட்டிவிட்டார்கள். பெரிய டாக்டர் அதையே உண்மை என்று நம்பி என்னைக் கண்டவாறு திட்டியபடியே வைத்தியம் செய்துவிட்டுப் பிறகு அவர் வீட்டிற்கு என்னையழைத்து இச்செய்திகளைக் கூறி கண்டித்தார்.

எனக்கு மிகவும் புதுமையாயும் மன அதிர்ச்சியாயும் இருந்தது. உடனே நான் நிஜத்தைக் கூறி பலான பலான மருந்துகள் கொடுத்தேன் என்று சொன்னேன் ... கால விதி எப்படி இருக்கிறது பாரு. ஒருவருக்கு நல்ல மதிப்பு உண்டாகிறதென்பதையறிந்ததும் அவர்களைக் கெடுக்கவே மற்றவர்கள் கிளம்புகிறுர்கள்...

சௌதாமினி...நான் ஆண்பிள்ளை. எப்படியோ தப்பித்துக் கொள்ளமுடியும்... உனக்கு இம்மாதிரியான சதியாலோசனைச் சம்பவங்கள் யாராலாவது ஏற்பட்டுவிட்டால் மிக்க கஷ்டம்...ஆகையால் நீ ஒருவரிடமும் பகையே கொள்ளாதே...பக்ஷமாகவே நடந்து கொள்ளு...கடவுள் இருக்கிறுர்...

சௌதா :—நானும் என்னால் கூடிய வரையில் ஒருவரிடமும் பகை கொள்ளாமல்தான் இருக்கிறேன்...அந்த நர்ஸுகள் மட்டும் என்னைக் கண்டாலே பொறாமையுடனேயே பார்க்கிறார்கள்...நான் செய்த பாவம் அது. நான் கொஞ்சமாவது புண்ணியம் செய்திருந் தால் என் பிறவி இப்படி இருக்குமா...எல்லாம் என் விதி...

காரும் ஆஸ்பத்திரி வாசலில் நின்றது......'சௌதாமினி! சென்று வா...நான் நாளைகாலையில் பார்க்கிறேன். விசனப்படாதே' என்றான்......அசைந்திடும் மயில்போல் சௌதாமினி இறங்கி கீழே நின்று தானே வண்டியின் கதவைச் சாத்திவிட்டு"டாக்டர்...ரொம்ப வந்தனம்...இந்த ச்ரமத்திற்கு மன்னிக்கவேண்டும்...நான் சென்று வருகிறேன்'' என்றாள். டாக்டரும் பதிலில்லாமல் சௌதாமினி யையே உற்று நோக்கினான். அடுத்த நிமிடம் கார் புறப்பட்டுவிட் டது. சௌதாமினியும் வெகு காம்பீரத்துடன் வனதேவதையோ வன்மை மிகு சித்திரப்பாவையோ வென்று ஐயுறும்படியாக உள்ளே சென்றாள்.

அன்றைய கூட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் முற்றும் நடந்துகொண்டிருந்தன. அனேக நர்ஸுகள் கூடியிருந்தார்கள்' குறித்த நேரத்திற்கு தலைவியும் வந்து சேர்ந்தாள். தலைவியை வர வேற்று உபசரித்து ஆசனத்திலமர்த்திய பின்னர், தலைவியை சபை யோருக்கு காரியதரிசி அறிமுகம் செய்துவைத்தாள். பின்னர் கூட் டம் ஆரம்பமாயிற்று. தலைவி வெகு தெளிவாயும், சாந்தமாயும், பொருள் சுவையுடனும் அழகான ப்ரசங்கம் செய்யவாரம் பித்தாள்.

"என்னருமை சகோதரிகளே!...

இங்கு தலைமை வகிக்கும்படியான பாக்யத்தை எனக்குக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி யறிதலுடைய வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகத்தில் கடவுளால் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனி தருக்கும் நாம் எதற்காகப் புவியில் படைக்கப்பட்டிருக்கிறோம் ...நாம் பிறந்ததின் பயன் என்ன....ஆறறிவு படைத்த மனித

ஜென்மாவின் மனிதத்தன்மையை அறிந்து உலகிற்கு உதவும் முறையில் நாம் நமது கடமையைச் சரிவரச் செய்யவேண்டும் என்ற முதல் எண்ணம் அவருடைய இதயத்தில் தோன்றி னல்தான் தன் கடமையைச் சரிவர செய்ய முடியும்.

மனிதன் மனிதத் தன்மையை அடைந்து தன் வாழ்க் கையை செவ்வனே அறிந்து நடத்தி இகத்திற்கும் பரத்திற்கும் வேண்டிய சாதனத்தைத் தேடிக்கொள்வதற்காகவே மனித னுக்கு அறிவு என்ற அரிய பொருளைக் கடவுள் கொடுத்திருக் கிறார். அந்த அறிவு என்ற பொருளை ப்ரகாசிக்கச் செய்வ தற்காகத்தான் கல்வி என்ற கருவியைக் கடவுள் காட்டி இருக் கிறார்...ஏட்டுப்படிப்புக் கல்வி மாத்திரம் புத்தகம் புத்தகமாய் படித்துவிடுவதில் உபயோகம் பெற்றுவிடவோ பிறருக்கு உப யோகப்படும்படிச் செய்துவிடவோ முடியாது. ஏட்டுப் படிப்பு எத்தனை அவசியமோ அத்தனை அனுபவக் கல்வியும் மிக மிக அவசியம். இந்த ரகஸ்யத்தை நீங்கள் முக்யமாக அரிய வேண்டும்.

மற்ற எல்லாத் தொழிலையும் விட நம்முடைய தொழிலா கிய நர்ஸ் தொழிலுக்குத்தான் அனுபவ ஞானம், அனுபவக் கல்வி, அனுபவ முறைகள் மிகவும் அவசியமானவை. நாம் படித்தபடியே நோயாளிக்குச் செய்யவேண்டிய சிகிச்சைப்படி மருந்து கொடுப்பது, ஊசி ஏற்றுவது, ஐஸ் வைப்பது முதலிய வைகளை எந்திரம்போல் செய்துவிடுவது மட்டும் இருந்தால் போதுமா! அது ஒருநாளும் போதாது.

நோயாளிகளின் மனப்போக்கை யறியும் சக்தியும், அதற் குப் பொறுமையும் அத்யாவச்யமாகும். எப்படியெனில் பல நாட்களாக வ்யாதியுடன் அவஸ்தைப்படும் நோயாளி மருந்து குடித்துக் குடித்து சலித்துப் போய் நம்பிக்கை இழந்து சீறி விழுந்து கடுமையாக இருப்பான். அச் சமயம்தான் அனுபவ ஞானம் வேண்டும். நம்முடைய சாந்தமான உயர்ந்த குணத் துடன்கூடிய வார்த்தைகளால் அவர்களின் மன அதைரி யத்தை மாற்றி, நம்பிக்கையை உண்டாக்கி நல்லதனமாகவே

சிரித்துக்கொண்டு சிகிச்சை செய்தால் நம்முடைய வார்த்தைகளும், பொறுமையும், அன்புமே நோயாளியை மாற்றிவிட முடியும்.

அதை விடுத்து "ஏன் இப்படி பிடிவாதம் செய்கிறாய்... ஊசி ஏற்றிக்கொள்ளாவிட்டால், மருந்து சாப்பிடாவிட்டால் செத்துப்போய்விடுவாய்...வைத்தியர் கொடுக்கச்சொன்னதை நான் கொடுத்துத்தான் தீருவேன். ஊம்...என்று சற்றும் மனிதத்தன்மையற்ற அதிகாரம் செய்வதாயின் அதில் உபயோக முண்டாகுமா...இதை முதலில் டாக்டர்களைவிட நர்ஸ்கள்தான் தெரிந்துகொள்ளவேண்டும் ... ஒரு தாயானவள் குழந்தையை எப்படி வளர்க்கும் பொறுப்பைப் பெற்றிருக்கிறாளோ அப்படியே நர்ஸ்களும் தாய் மாதிரி மனத்தில் பாவித்துக்கொண்டு தம் கடமையை மிகவும் சாந்தத்துடனும் அன்புடனும் செய்யவேண்டும்.

இன்னொரு விஷயம் .. ...சில ஆஸ்பத்திரிகளில் நர்ஸ்கள் ஏழை நோயாளிகளைச் சரியாய் கவனிப்பதே இல்லை என்றும் நோயாளிகளிடம் காசு கேட்பதாயும், யார் பணம் கொடுக்கிறார்களோ அவர்களைச் சரியாக கவனிப்பதும் பணங் கொடாதவர்களை அலக்ஷ்யம் செய்வதாயும் சில ஏழை நோயாளிகளின் வாயினாலேயே நான் கேள்விப்பட்டு இங்கு கூறுகிறேன்.......

அம்மாதிரியான கேவல முறை—லஞ்சம் வாங்கும் முறை—உங்களிடத்தில் இருக்காதென்றே நம்புகிறேன். அம்மாதிரி செய்பவர்கள் யாரேனுமிருப்பின் அவர்களைக் கண்டிக்க வேண்டியே நான் இதை தைரியமாகச் சொல்லத் துணிந்தேன். நமது கடமையை நாம் சரிவரச் செய்து நன்மையும், நல்ல பெயரும் அடைவதற்கு முதலில் பாடுபடவேண்டுமேயன்றி இம்மாதிரி சில்லறை விஷமத்தனங்கள் செய்வது மிகவும் குற்றமாகும்.

ஏழை நோயாளிகள் வயிறெரிந்து திட்டும் சாபத்திற்குத்தான் நாம் ஆளாகுவோம். பணம் வாங்குவதும் அலக்ஷியம்

செய்வதும் இன்று பெரிய காரியமாயும் சந்தோஷப்படக்கூடிய தாயும் தோன்றலாம். அந்த சந்தோஷங்கள்தான் நமது பிற்கால வாழ்க்கைக்கும் நல்ல பெயருக்கும் தடையான முட்டுக் கட்டையாயமையும் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கும்போது வெகு ஜாக்ரதையாக இருத்தல் வேண்டும், டாக்டர் முன்பு ஒரு மாதிரியாயும், பிறகு ஒரு மாதிரியாயும் இருக்காமல் எப்போதும் அக்கரையாயிருக்கவேண்டும்.

நர்ஸ் வேலையை மேற்கொண்ட யாரும் முக்யமான அம்சங்களாகிய சாந்தம்... ...தன்னடக்கம்.........நோயாளிகளிடத்தில் அன்பு, பணிவு, கனிகரம், அசங்கியத்தைப் பாராத சகிப்புத் தன்மை.......நோயாளி சீக்கிரம் குணப்படவேண்டும் நமக்கு நல்ல கைராசிக்காரி என்ற பெயர் வரவேண்டும் என்கிற பேராவல், தன்னுடைய சொந்த கஷ்டங்களாகிய தூக்கம், சிரமம், பசி, தாகம்.......முதலியவற்றைச் சகித்துக்கொள்ளும் பொறுமை, முதலிய குணங்களே முக்யமாகப் பெறவேண்டும். இவைகளில் ஒன்று குறைந்தாலும் இத் தொழிலில் நல்ல பெயர் எடுக்க முடியாது. முறமுறப்பும் சுறுசுறுப்பும் அவசியம்.

ஆதலால் சகோதரிகளே...நீங்கள் மேற்குறித்த அத்தனை விஷயங்களிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருப்பீர்களென்றே நம்புகிறேன்......இத்தனை குணங்களுக்கும் சிகரம் வைத்ததுபோல் நல்ல ஒழுக்கமும், தற்காப்பும் அத்யாவச்யமிருக்கவேண்டும். இம்மாதிரி முறையில் சகல நர்ஸ்களும் தம் தொழிலைச் செய்து வந்தால் எத்தனையோ மேன்மை பெற்று நற்கியாதியை விரைவில் அடையலாம்...இதுதான் நான் சொல்லவேண்டிய விஷயமாகும்...

என்று கூறி முடித்தாள். இந்த ப்ரஸங்கத்தின் ஆணித்திறமான வாசகங்கள் சௌதாமினியின் இதயத்தில் ஊன்றிப் பதிந்தன. அவளால் கூடிய வரையில் மேற்குறித்த முறையுடனேயே நடந்துவருவதால் இன்னும் அம்மாதிரியே சிறப்பாக நடந்து நற்பெயரெடுக்கவே மனத்தில் ஆவல் கொண்டாள்.

வந்தனேபசாரத்துடன் கூட்டம் கலைந்தது. இப் பிரஸங்கத்தைப் பற்றி கொண்டாடிப் பேசும் கூட்டமும், குறைகளும் குற்றங்களும் கற்பித்துப் பேசும் கூட்டமும் தனித்தனியே பிரிந்துவிட்டன. அவரவர் தொழிலைச் செய்ய சென்று விட்டார்கள். சௌதாமினியும் தன்னுடைய வார்டுக்குப் போய்விட்டாள்.

தனது கடமைகளை என்றுமே வெகு கவனமாயும், அக்கரையாயும் செய்துவரும் சௌதாமினியின்பேரில் அங்குள்ள மற்ற நர்ஸ்களாகிய பாக்யம்...செல்லம்...குஞ்சம்மாள் .. கோலாகலம்.... ஆகிய நால்வருக்கும் மிகவும் பொருமையும், அசூயையும் இருந்து வந்தது. ஒரு தினம் சௌதாமினி வார்டை சுற்றிக்கொண்டு வரும்போது, நோயாளிகளில் சிலர் "ஐயோ! தாகம் நாக்கை வரட்டறதே ... குளிர் தாங்க முடியலேயே......அம்மா...நரஸம்மா...நரஸம்மா ......என்று கத்துவதைக் கண்டு, இதைக் கவனியாது தூர உட்கார்ந்திருக்கும் இந்நால்வரையும் நோக்கி "அந்த நோயாளிகள் அலறுகிறுர்களே! அவர்களைச் சற்றும் கவனிக்காமல் இப்படி உட்கார்ந்து அரட்டை அடிக்கிறீர்களே! இது சரியா.......... அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடாதா!" என்று கேட்டு விட்டாள்.

அவ்வளவுதான் அந் நால்வருக்கும் கோபம் பொங்கிவிட்டது. கண்கள் சிவக்க ஆத்திரத்துடன் "ஆமாண்டீ! பெரிய டாக்டரம்மாளின் அன்பு இருக்கும் திமிரால் எங்கள் மீது குற்றம் சொல்லமாட்டயோ...நீ எந்த மாதிரி அந்தம்மாளை கைக்குள் போட்டுக்கொண்டிருக்கிருய் என்பது எங்களுக்குத் தெரியாதென்று பார்க்கிருய்... வெகு கெட்டிக்காரியாயும் பகட்டாகவும் நடந்துகொள்வதிலேயே உன் ஊழல் ஒருவருக்கும் தெரியாதென்று பார்க்காதே...அதிகம் பேசினல் ஆபத்தில்தான் முடியும்.

நீதான் மகா கருணைக் கடலாயிற்றே...தண்ணீருக்கு அலையும் நோயாளிக்குத் தண்ணீர் வார்ப்பதுதானே...உன் ஜோலியைப் பார்த்துக்கொண்டு போடீ!—சதா அந்த டாக்டர் ஹரிநாத் துடன் சுற்றிக்கொண்டலையும் ஊழலை மறைக்க இங்கு நாட்டியம் ஆடுகிருயா...இந்த குட்டும் வெளியாகிவிடும் இரு"...என்று மிகவும் ஆக்

ரோஷத்துடன் கறுவியதைக் கண்டு சௌதாமினி நடுநடுங்கிப்போய் "ஐயோ! நாம் ஏன் இதைத்தான் கேட்டோம்...ஐயோ...இவர்களின் ஆத்திரமும், கோப வைராக்கியத் தீயும் என்ன அனர்த்தத்தை விளைவிக்குமோ தெரியவில்லையே!"...என்ற பயமும் மனக் கலக்கமும் உண்டாகிவிட்டன. காலத்தின் கோலம் என்ன பலனைக் கொடுக்குமோ, யார் கண்டது?

---

## 2-வது அதிகாரம்

## பக்திப் பெருக்கே முக்திக்குத் தோணியாம்

"கேட்டையா ஆச்சரியத்தை!...நம்ப ஊரே அம்முளி கும்முளி படுகிறதே! உனக்குத் தெரிந்தும் நீயுமா சொல்லாதிருக்கே?" என்று காமாட்சி, மீனாட்சியைக் கேட்டாள். மீனாட்சி நீட்டி மடக்கிக் கையை ஆட்டிக்கொண்டு "என்ன ஆச்சரியம்!...எனக்கு ஒன்னுமே தெரியாதே!...தெரிந்தால்கூடவா நான் சொல்லாமலிருப்பேன்?...நான்தான் நாலு நாளா ஊரிலேயே இல்லையே...என்ன விஷயம்! உடனே சொல்லு" என்று ஆவலுடன் கேட்டாள்.

காமாட்சி :—நம்ப ஊர் மலையடியிலெ ஸ்வாமி கோயில் இருக்கோன்னே. அந்த கோயிலுக்குப் பக்கத்துலே இருக்கும் மண்டபத்திலே ஒரு சன்யாசி வந்திருக்காளாம்...

மீனா :—என்ன! என்ன!...சன்யாசி வந்திருக்கிறாளாம் என்றால் பொம்மனாட்டி சன்யாசியா...இதென்ன ஆச்சரியண்டியம்மா! புருஷாள்தான் சன்யாசிகளாய் கையிலே கமண்டலமும், காவி உடையுமா வரதுண்டு. பொம்மனாட்டியும் அப்படி வந்திருக்கிறாளா...

காமு :—ஆமான்னக்கா.....கோவிலுக்குப் போற அத்தனை ஜனங்களும் அந்த சன்னியாசினியையே பார்த்து ப்ரமிச்சுபோறா

ளாம். பலபேர் பல மாதிரி கொண்டாடுகிறுர்களாம். பழமும் தேங்காயும் பாலும் தயிரும் ஜனங்கள் கொண்டு கொடுத்து சேவிக்கிறுர்களாம். சிலருக்கு குறியும் சொல்ருளாம்...என்னென்னமோ பேசிக்கிறும்மா...இதெல்லாம் பாத்தா நாம்பளும் போய் பாக்கலாமேன்னுதான் இங்கே வந்தேன் .... நீயும் வரயா? சாயங்காலம் கல்யாணி, முத்துலக்ஷ்மி, சம்பகம் எல்லாரும் வரேன்னு. போய் பாத்துட்டு வரலாம்...அவ பெரிய வயசானவளும் இல்லேயாம்...சின்னவளாத்தான் இருக்காளாம்...

மீனு :—அப்படி சின்ன வயசுலெ எப்படி சன்னியாசியாப் போய்டுவா, அந்த மாதிரி சின்ன வயசுக்காரி இப்படி தனியா வரலாமோடீ...அவளெ அப்படி தனியெ விட்டுவைப்பாளோ...அது அது என்ன ரகஸியமோம்மா...யார் கண்டது?

காமு :—பல பேர் பல மாதிரியாத்தான் சொல்ரு...என்ன அழகா இருக்காளாம் தெரியுமா?...தேகத்தைப் பாத்தா! தந்தம் போலெ இருக்காம்...முகமோ விசாலமா சந்திரபிம்பம் மாதிரி ப்ரகாசிக்கிறதாம். கண்ணில் இருக்கும் களே சொல்லவே முடியாதாம் தலே எல்லாம் ஜடை விழுந்துவிட்டதாம்...காவிப் புடவை தான் கட்டி இருக்காளாம். கழுத்திலெ துளசி மணி ஹாரம் போட்டிருக்கிறுளாம். நெத்தியிலெ விபூதியும் குங்குமமும் இட்டுக்கொண்டிருக்கிறுளாம். சதா பாட்டு பாடி பகவானே பஜனே பண்ணுகிருளாம். கன்னுபின்னுவென்று தின்பதில்லேயாம்! எப்போதோ ஒரு வேளே தனக்குப் பிடித்ததை சாப்பிடுகிறுளாம்...என்னமோ போ! உலகத்திலே நாக்கெ படைத்த ஜனங்கள் நாலுந்தான் ஒளறுகிறுர்கள்...சரி! இன்னிக்குப் போவோமா...

மீனு :—உலகத்திலே அதிசயம்னு அதைப் பார்க்கத்தானே வேணும். இன்னிக்குக் கட்டாயம் போய்வரலாம்...

சாயங்காலம் 5 மணிக்கெல்லாம் போய் விளக்கு வெக்கறத்துக்குள்ளே திரும்பிவந்துடலாம் என்று முடிவு கட்டியாயிற்று.

அன்று அவரவர்களின் வீட்டு வேலேகள் வெகு மும்முரமாகவும், பரபரப்புடனும் நடந்தன. மாலே 4, 5 மணிக்கே மீனுட்சியின்

வீட்டு ரெட்டை மாட்டு வண்டி மணியோசை கணீர் கணீர் என்று ஒலிக்கக் கிளம்பிவிட்டது. மேற்குறித்த அம்மாமார்கள் முற்றும் வண்டியில் ஆரோகணித்து வெகு ஆநந்தமாகப் பேசிக்கொண்டே கிளம்பிவிட்டார்கள். கடகடவென்று வண்டி போகும் ஓசை இவர்கள் சம்பாஷணைக்குச் சுருதி வைத்ததுபோல விருந்தது. முதலில் கல்யாணியம்மாளே கல்யாணம்போல் சம்பாஷணையைத் தொடங்கினுள்.

கல்யா :—ஏண்டீ!...அந்த பொம்மனுட்டி என்னமோ கெட்டுப்போய் ஓடி வந்தூட்டவளாமே...அவளெ பார்க்கவா நீங்க போரங்கோன்னு எங்க எஜமானர் கோவிச்சுண்டார்...எது எப்படியானு என்ன, கண்ணுலே பார்க்க கறப்பா...என்று வந்துட்டேன்.

முத்து :—ஒரு பொம்மனுட்டி பயமில்லாமே இப்படி பெரிய சன்னியாசி மாதிரி வந்துட்டான்னு அதிலே ஆச்சரியமும் இருக்கும்; சந்தேகமும் இருக்கும். ஜனங்கள் கண்மூடித்தனமா அவளெ சுத்திக்கிண்டு பூஜை வேறே பண்ராளாமே...என்ன என்ன அனியாயண்டீ...

சம்பகம் :—கொஞ்சங்கூட மகிமெ இல்லாதெ இப்படி ஜனங்கள் அவளெ சுத்திக்கமாட்டா! ஏதோ கொஞ்சமாவது இருக்கத்தான் இருக்கும். சதா பகவானை ஸ்மரணை செய்கிருளே அதுவே ஒரு மகிமைதானே. அந்த காலத்துலெகூட எத்தனை பெண் மணிகள் துறவியாகி கடவுளின் சாயுஜ்ய பதவியை அடைந்திருக்கிருர்கள் என்று நாம் படிக்கவில்லையா...இந்த கலியுகத்தில் உண்மைக்கு வர வர மதிப்பு குறைவதால் அவளுடைய பக்தியும் சன்யாசமும் உண்மையாக இருந்தால்கூட ஜனங்கள் நம்பாது கண்டபடி உளறுகிருர்கள். எனக்கு அப்படி கண்மூடித்தனமாகச் சொல்ல இஷ்டமில்லெ...அவள் எப்படிப்பட்டவளாகவாவது இருக்கட்டும். மனிதர்களின் பார்வைக்கு பரிசுத்தவதியாய் நெருப்புபோல விருப்பதோடு சதா பகவத் ப்ரார்த்தனை செய்கிருள். இதைத்தான் கொண்டாடுவோமே...அதோ பாரேன் கூட்டத்தை....எத்தனை ஆரவாரம், மணி ஓசை, என்னென்ன அமர்க்களம் பாருங்கள்.

இதற்குள் வண்டி மண்டபத்தினருகில் வந்து நின்றது. கூட்டமான கூட்டம் கூறவே திறமில்லை. ஜனங்கள் தங்கள் தங்கள் மனப்

படி பேசிக்கொண்டு போவோரும் வருவோருமாக இருக்கிறார்கள். இவர்களும் கும்பலை நெட்டிக்கொண்டு மெல்ல உள்ளே சென்றார்கள். உள்ளே ராதா ருக்மிணீ சமேத ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் பெரிய படத்தை புஷ்பங்களால் அலங்காரம் செய்துவைக்கப்பட்டிருக்கிறது.

இரு புறமும் குத்து விளக்குகள் எரிகின்றன. சிறிய ஜோதி விளக்குகள் ஏராளமாக எரிகின்றன. பூஜா த்ரவ்யங்கள் தட்டுகளில் ஏராளமாக வைக்கப்பட்டிருக்கின்றன. பொது ஜனங்கள் தட்டு தட்டாக பழமும், தேங்காயும், தாம்பூலமும், வாஸனை த்ரவ்யங்களும் செம்பு செம்பாக பாலும், தயிரும் வெண்ணெயும் கொண்டு வைத்திருக்கிறார்கள். சிலர் சமையலுக்கு சாமான்களாகவே கொண்டு வைத்திருக்கிறார்கள்.

அங்கு சன்யாசினி அந்த படத்திற்கு முன்புள்ள வெள்ளியினாலான ராதா ருக்மிணீ சமேதமான விக்ரகங்களுக்கு பால், தயிரு, இளநீர் முதலியவற்றால் நீராட்டி (திருமஞ்சனம் செய்து) அலங்காரம் செய்து, கற்பூர ஹாரத்தி செய்து, நிவேதனம் செய்த பின்னர் "கிருஷ்ணா! கிருஷ்ணா! கிருஷ்ணா!" என்று பக்தி பரவசமாகக் கூவி விழுந்து நமஸ்கரித்துப் பின்னர் பாட வாரம்பித்தாள். அந்த கானம் சாதாரண கானமாக இராமல் தேவகானமோ, கந்தர்வ கானமோவென்று ஐயுறும்படி மக்களை பரவசமுறச் செய்தது.

மால்கோஸ் ராகம்.

(1) நிலையற்ற உலகம் நீர்மேல் குமிழியாம்
வலையினுள் மீனைப்போல் கலங்கிடும் மாந்தரை
அலைந்திடாவாறு உன் அரிய பதம் தந்தால்
உலகளந்த மகிமை ஒழிந்திடுமோ கண்ணா!

(2) கோர ஸம்ஸாரமாம் காரிருளினின்றும்
மீறிடும் வகையின்றி மீறும் துயரில் நொந்து
கோரியுனை தினம் கூவி யழைத்தும்
ஸாரஸ நயனனே பேருறக்கமோ கண்ணா!

என்ற பாடலை வெகு உருக்கமாகப் பாடினாள்.

அங்கு கூடியிருந்த ஜனங்கள் இந்த பாடலைக் கேட்டு மெய் மறந்தார்கள். அவர்களில் சில பாமர மக்கள் இந்த சன்யாசினியை ஜோஸியம், குறி, ஆரூடம் முதலியன சொல்லும் சாமியார் என்று எண்ணி, "அம்மா! தாயே!" என்று காலில் விழுந்து கும்பிடு கிறார்கள் "தாயே!...எங் குடும்பத்துலெ இருக்கிற கஷ்டம் எப் போது நிவர்த்தியாகும்? என் புருஷன் சதா என்னை இம்சித்து உபத்திரவிக்கிறார். தாசி வீடே கதியா இருக்கிறார். எப்போது அவ ருக்கு நல்ல புத்தி பிறக்கும்...எப்போது வீட்டோடு இருப்பார்? எப்போது எனக்கு நல்ல காலம் பிறக்கும்?" என்று அடுக்கடுக்காக கேள்விகளை ஒருத்தி கண்ணீர் பெருகக் கேட்டாள்.

இவள் முடிப்பதற்குள் மற்றொருத்தி "அம்மா! எனக்கு ஏராளமா சொத்து இருக்கிறது. ஒரு குழந்தை இல்லாது சதா உருகித் தவிக்கிறோம். எனக்கு புத்திர பாக்கியம் உண்டாகுமா வென்று ஜோஸியம் சொல்லுங்களேன். என் நக்ஷத்திரம் பரணி... என் புருஷன் நக்ஷத்திரம் ரேவதி...எத்தனையோ ஜோஸியர்களைக் கேட்டோம். எத்தனையோ மந்திரவாதிகளிடம் பார்த்தோம் எத்த னையோ கோயில் சுற்றினோம்...வயதோ ஆகிவிடுகிறது. ஆசையோ நீங்கியபாடில்லை. எனக்கோர் வழி சொல்லக்கூடாதா?" என்றாள்.

இதற்குள் மற்றொருத்தி "அம்மணீ! எங்க பங்காளிகளின் உபத்திரவம் சொல்ல முடியாது. என் புருஷனுக்கு சொந்த மூளையே இல்லை. சதா சினேகிதர்களுடன் சேர்ந்துகொண்டு குதி ரைப் பந்தயத்திலும் சூதாட்டத்திலும் பணத்தை எல்லாம் ஒழித்து விட்டார். இப்போது கஞ்சிக்கும் பஞ்சாய்ப் பறக்கவேண்டி இருக்கு. பங்காளிகளும் சொத்துக்களை மோசம் செய்துவிட்டார்கள். இந்த கஷ்ட காலம் நீங்கி நல்ல காலம் பிறக்குமாவென்று சற்று சொல்லுங் களேன். புண்ணியமுண்டு." என்றாள்.

வேறொருத்தி "தாயே! என் கஷ்டத்தைப்போல் உலகத்தி லேயே இல்லை. எனக்கு நாலு பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒன் றுக்காவது கல்யாணம் செய்ய வழியில்லை. யார் பார்த்தாலும் கல் யாணம் செய்துகொள்ள மறுத்துப் போய்விடுகிறார்கள். நானே

ஏழை. என்ன செய்வேன்? கல்யாணம் செய்யாததனால் ஜாதிக்காரர்கள் ஏசிப் பேசி எள்ளி நகைக்கிறார்கள். குழந்தைகளும் குன்றிப் போகின்றன இதற்கு என்ன பாபம்தான் குறுக்கே இருக்கிறதோ! தயவு செய்து இதற்கோர் பரிகாரம் சொல்லிக் காப்பாத்தணும்'' என்றாள்.

பின்னொருத்தி "தாயே!...என் புருஷனும் நானும் விவாக காலம் முதல் வெகு அன்யோன்யமாயும், பரம ப்ரீதியுடனும் இதுகாறும் இல்லறம் நடத்தி வந்தோம், திடீரென்று சில காலமாய் அவர் மனம் மாறிவிட்டது. "கிரிஸ்தவ மதத்தில் சேரப்போகிறேன்; நீயும் சேர்ந்தால் என்னுடன் இருக்கலாம்: இல்லையேல் நீ தனியே இருக்க வேண்டியதுதான்'' என்று பலதரம் கூறுகிறார். அதைக் கேட்கும்போதே எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. என்ன செய்வேன்?...அவர் மனம் பழையபடி திரும்பிவிடுவதற்கு ஏதாவது ஒரு வழி சொல்லவேண்டும்'' என்று உண்மையான வருத்தத்துடன் கூறினாள்.

இதுபோல் பல பேர்கள் அடுக்கடுக்காகக் கேட்டார்கள். அந்த சன்யாசினி எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டே கிருஷ்ணனின் படத்தைப் பார்த்தவாறு வீற்றிருந்தாள். வண்டியில் வந்திறங்கிய நமது மீனாட்சி முதலியோர்களுக்கு இவைகளைக் கண்டு உண்மையில் மனம் சற்று மாறுபட்டது. சன்யாசினியின் அழகையும், பொறுமையையும், பக்தியையும் பார்த்துப் பார்த்து மனதுக்குள் ஒருவித மான உணர்ச்சி உண்டாகியது. நாம் பகவானுக்கு ஒன்றும் வாங்காது வந்துவிட்டோமே என்று எண்ணினார்கள்.

சன்யாசினி தன்னை வேண்டியவர்களையும், மற்றையோரையும் நோக்கி வணக்கத்துடனும், மரியாதையுடனும் பேசத் தொடங்கி " தாய்மார்களே!...

நான் செய்துள்ள பாபம் அளவு கடந்தது. என் பாப ஜன்மத்தின் மர்மம் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் நினைப்பது போல் நான் ஜோஸியக்காரியல்ல. குறி சொல்லும் ஞானக் குறத்தியல்ல. கடவுளின் பரிபூரண அருள் பெற்ற அறிவுக் கொழுந்துமல்ல. நான் ஓர் கேவலமான மனுஷிதான். ஆனால் உங்களுக்கும்

எனக்கும் உள்ள வித்யாசம் என்னவென்ருல் நீங்கள் இன்னும் மன பரிபக்குவம் பெறவில்லை. இம் மாய ப்ரபஞ்சத்தின் மாயையை நம் புகிறீர்கள். நான் மன விரக்திகொண்டு இம் மாய ப்ரபஞ்சம் ஓர் நாடக மேடை. நீர்மேல் குமிழி. நிலையற்றது. கானல் நீருக்கு ஒப்பானது. இது சதமல்ல. இப் பிரபஞ்சத்தையும் மற்றவைகளையும் படைத்த கர்த்தாவாகிய பகவானின் சரணரவிந்தந்தான் சதமானது. நித்ய சுகத்தை யளிக்கக்கூடியத் என்பதை நன்கறிந்து கொண்டு அவனையே தஞ்சமாக நம்பி இருக்கிறேன்.

நீங்கள் முறையிட்ட கஷ்டங்களை ஒரு காலத்தில் நானும் கஷ்டமாயும் சுகமாயும் அனுபவித்தது கனவுபோல் நினைவு இருக்கிறது. ஆனல் அதற்கு நான் ஒரே பதில்தான் சொல்லமுடியும். நம்மைக் கடவுள் எப்போது படைத்தானே அப்போதே நாம் முன்பு செய்த பலா பலனுக்குத் தக்கவாறு அனுபவிக்க வேண்டியவைகளை நம் மண்டையில் எழுதி மயிரால் மறைத்திருக்கிருன். அதன்படிதான் யாவும் நடக்கும். ஆனல் நாம் எத்தனை கஷ்டங்களையும் சங்கடங்களையும் அனுபவித்தபோதிலும் மனத்திலுள்ள ஒழுக்கம், தைரியம், பக்தி, முதலிய உயர்ந்த பொருள்கள் குன்ருமல் ஈசனையே ஸ்மரணை செய்துகொண்டிருந்தோமேயானல் கஷ்டத்தையும் சுகமாக அனுபவிக்கும் சக்தி பெறலாம். எதற்கும் மனத்தில் பரிசுத்தமும், ஒழுக்கமும், பக்தியுந்தான் ப்ரதானம். இதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்.

இதைவிட நான் வேறு ஒன்றும் சொல்லப்போவதில்லை. “ ஆக்கவும் அழிக்கவும் சக்தி படைத்தவன் அவனே! அவன் சரண் நம்பினல் ஒரு குறைவுமில்லை. அவனையே குழந்தையாக பாவித்து விட்டால் வேறு குழந்தை இல்லையே என்ற குறையும் தோன்றமா; இந்த மன பரிபக்குவத்தை அடைவதற்குத்தான் மக்கள் முயல வேண்டும்.

அம்மா! நீ உன் புருஷன் கஷ்டப்படுத்துவதாயும், தாசி வீடே கதியாக இருப்பதாயும் தெரிவித்தாயே...அதற்கு ஒரே வழிதான் கண்ணன் என் புத்தியில் காட்டுகிருர். உன் புருஷன் எந்த தாசி

யிடம் நேசமாயிருக்கிறரோ அந்த தாசியை நீ பழித்துக்கொள்ளா மல் நேசமாகவும் சகோதரியைப்போலவும் எண்ணிப் பழக வாரம் பித்தால் உன்னுடைய உயர்ந்த குணத்தினுல் அந்த தாசியின் மனம் மாறி உனக்கு த்ரோகம் செய்வதை தானே அறிந்து விலகிவிடுவாள். உனது மாசற்ற குணத்தின் மகிமை உன் புருஷனுக்கும் தெரிந்து உன்னேயே அவனும் நேசிப்பான். இதுதான் அதற்கு மருந்து.

அம்மணி! உன் புருஷன் மதத்தைவிட்டு மதம் மாறுவதாகக் கூறுகிருனே அவனே இப்போதே மாத்திவிடுவதென்பது இயலாத காரியம். நீயும் மதத்தை விட்டு மாறுவதாகவும் அவனேப் பிரியமாட் டேனென்றும் கெட்டியாய்க் கூறிக்கொண்டே நம்முடைய மதத்தி லிருக்கும் உண்மை தத்துவத்தை அவன் அறியும்படிக்கு நீ செய்து விடவேண்டும். அது எப்படியெனில் நீ ஒரு மரக்கட்டையினுலான ஆண்பொம்மையை வைத்துக்கொண்டு அதையே உனது கணவன் போலப் பாவித்து அதனுடன் பேசுவது, கொஞ்சுவது, மரியாதை காட்டுவது இப்படி சில தினங்கள் உன் புருஷன் கண்ணுல் பார்க்கும் படிச் செய்து வா...இதென்னவென்று உன் புருஷன் கேட்டால் இதுதான் என் கணவன் என்று கூறு. அவனுக்கு ஆத்திரம் பொங் கும். அதைக் கண்டிப்பான். அதையே சரியான சமயமாகக்கொண்டு "ஏன் இப்படி கோபம் வருகிறது. தான் தோன்றிய மதத்தைவிட பிற மதந்தான் உயர்ந்தது. மோக்ஷங் கொடுக்கும்; உண்மையானது என்று நீங்கள் நம்புவதுபோல் நான் ஏன் இந்த பொம்மையே என் உண்மையான கணவன். உண்மையான இன்பத்தைக் கொடுக்கக் கூடியது என்று நம்பலாகாது? நம்முடைய மதத்தில் இல் லாத விஷயமே உலகத்திலில்லே. இது பல பெரியாரும் அறிஞர்க ளும் அறிந்து ஒப்புக்கொள்ளும் உண்மை.

அங்ஙனமிருக்க, இதிலில்லாத வேறு பெரிய விஷயங்கள் அந்த மதத்திலிருக்கிறதென்று நீங்கள் நம்புவதுபோல் உங்களிடம் இல்லாத பல அரிய நன்மைகள் இந்த பொம்மையிடம் இருக்கு மென்று நான் ஏன் எதிர் பார்க்கலாகாது? அதனுல் இதையே கொண்டாடுகிறேன்.'' என்று கூறு. இதனுல் கட்டாயம் அவன் மனம் மாறி உண்மையை அறிந்தே தீரும். அப்படியும்

இல்லையென்றால் பிறகு பார்த்துக்கொள்வோம். கடவுள் இருக்கிறார். அவரவர்களின் மதம் அவரவர்களுக்கு உயர்வு. பிற மதம் இழிவென்றோ, தன் மதம் உயர்வென்றோ யாரும் கருதக்கூடாது. இது மிகவும் குறுகிய புத்தியையும், அல்ப அகம்பாவத்தையும் காட்டும். ஆகையால் நீ பேசும்போது எந்த மதத்தையும் தூஷிக்காமல் பேசு. இதுதான் நீ முதலிலறியவேண்டிய விஷயம்...

அம்மா! உங்கள் குமாரத்திகளுக்கு விவாகமாகவில்லையே என்று கவலையே படவேண்டாம்...எல்லோரையும் தைரியமாகப் படிக்க வைத்துக் கல்வியறிவை ஊட்டி உலகிற்கு உபயோகமாகும் படிச் செய்துவிடுங்கள். அப்போது தானாகவே மணக்க முன்வருவார்கள். மணக்க வரவில்லையே என்ற கவலையை நீங்கள் காட்டிக்கொள்வதால்தான் பிறருக்கு இளப்பம் உண்டாகும்...

அம்மா! உங்கள் புருஷன் குதிரைப் பந்தயத்தில் தோற்கும் விஷயத்திற்கு மருந்து, பகவானை நீங்கள் ப்ரார்த்திப்பதுதான். அதாவது பந்தயத்தில் காலணா வரும்படியையும் ஓரணா செலவையும் காட்டுவதால் காலணா வரும்படியில்தான் அத்தகையோரின் மனம் த்ருப்தி கொண்டு மேலே சபலத்தை யடையும். ஆதலால் காலணா வரும்படியும் இல்லாமல் தோல்விமேல் தோல்விமை சீக்கிரம் கொடுக்க வேண்டு மென்று பகவானை வேண்டு. அம் மாதிரி நிலைமை வந்து விட்டால் தானே விலகிவிடுவான். இதுதான் விஷயம்...என்றாள்.

இதற்குள் பொழுதும் அஸ்தமித்துவிட்டது. இவைகளை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நமது அம்மாமார்களின் மனது பரம சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் அடைந்தது. அவர்கள் முதலில் கொண்டிருந்த எண்ணங்களை அடியோடு மாற்றிக்கொள்ளும்படியான நிலைமைக்கும் வந்துவிட்டார்கள். வீட்டுக்குப் போவதையும் மறந்தார்கள்.

சன்யாசினி எழுந்து வந்து வீதியில் கூடியிருக்கும் ஏழைகளைக் கூப்பிட்டாள். கடவுளுக்கு நிவேத்யம் செய்த பண்டங்களை அப்படியே அந்த ஏழைகளுக்குக் கொடுத்து பரம த்ருப்தியுடனும்

ஆநந்தத்துடனும் அதையே பார்த்தபடி "ஆஹா!...பசியின் கொடுமைதான் என்னே...கிருஷ்ணா!...உன்னுடைய பக்த கோஷ்டிகளில் சிலருக்குப் பசி என்பது எப்படி இருக்குமென்றே தெரியாமலும், சிலருக்குப் பசி தெரிந்தவுடன் அடங்கிவிடுவதும், மற்றும் சிலருக்குப் பசியைத் தவிர—தரித்திரத்தைத் தவிர—வேறு ஒன்றுமே தெரியாமலும் இருப்பதா இவ்வுலகத்தின் விநோதம்!...

அந்தோ! வாழைப்பழத்தின் தோலைக்கூடவன்றோ தின்று பசியாறுகிறார்கள். என்றுதான் இந் நாட்டில் இத்தகைய கேவலமான நிலைமை மாறி, மக்கள் பசியாற உண்டு களிக்கும் நாள் வருமோ! கிருஷ்ணா! என்றுதான் அந்த சுபீக்ஷமான காட்சியைக் காட்டுவாயோ... என்று மனமுருகி எண்ணியவாறு அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஏழைப் பரதேசிகளை நோக்கி "நாளைய தினம் சுமார் 50 பேர்களுக்கு ஆகாரம் கொடுக்கும் சக்தியைக் கிருஷ்ணன் கொடுத்திருக்கிறார். ஆதலால் நீங்கள் நாளைய தினம் வந்துவிடுங்கள்" என்றாள். இந்த காட்சி உண்மையில் எல்லோரையும் பரவசமுறச் செய்தது. வரும்போது பேசிக்கொண்டு வந்த மாதிரி அடியோடு மாறி, போகும்போது வியப்புற்றுக் கொண்டாடியவாறே நம் அம்மாமார்கள் சென்று விட்டார்கள்.

தினந்தோறும் இச் சன்யாசினியின் ப்ரபாவம் தடபுடலாகிக் கொண்டே வருகிறது. ஏழைகளுக்குச் சாப்பாடு போடுவதும் கிருஷ்ண பஜனை செய்வதுமாக அம்மண்டபத்திலேயே சில நாட்கள் தங்கிவிட்டாள். அச்சமயம் ஒரு நாள் பல பேர்கள் சாமான்கள் நிறைய கொடுத்துவிட்டதால் சுமார் 100 பேர்களுக்குப் பிச்சைக்காரர்களையும் மறுநாள் வரும்படியாக சன்னியாசினி ஏற்பாடு செய்துவிட்டாள்,

இந்த சன்யாசினியின் ஆத்ம சோதனையின் பொருட்டோ அன்றி வேறு எதற்காகவோ அன்றைய தினம் இரவு மண்டபத்திலிருந்த சாமான்கள் முற்றும் களவு போய்விட்டன. காலையில் எழுந்த பிறகே இந்த செய்தியை அறிந்த சன்னியாசினியின் அந்

கம் பதறியது. மனது உருகியது. வீதியில் பார்த்தால் விடியற் காலத்திலேயே ஏழை மக்களின் கூட்டம் கூடிவிட்டது கண்டு, சன் யாசினிக்கு துக்கம் தொண்டையை அடைத்துவிட்டது. "நான் இன்று என்ன விதமாக இத்தனை ஏழைகளின் பசியைத் தணிக்க முடியும்? கிருஷ்ணு! ஏன் இப்படி சோதனையைச் செய்து என்னை வாதனைப் படுத்துகிறுய்? நான் உன்னை நம்பிய அடிமையல்லவா?... ......நான் என்ன செய்வேன்?" என்று தவிக்கிருள். வீதியில் வந்து பார்த்தால் பல நாட்கள் பட்டினி கிடந்து எலும்பும் தோலுமாக உள்ள ஜனங்களின் பசிக் கொடுமையைக் கண்டு சகிக்க முடிய வில்லை. அனலி லிட்ட மெழுகென உள்ளம் உருகுகிறது.

அப்பனே! கிருஷ்ணு! கபீர் தாஸருக்கு பக்தர்களை நீயே காட்டி சோதனை செய்தாய்............அந்த மகானின் குறையைத் தீர்த்தும் வைத்தாய்.........எனக்குச் சாமான்களைக் காட்டி களவும் போக்கி விட்டாயே.........பசி தீர்க்கிறேன்; வாருங்கள் என்று வாயினல் சொல்லி வரவழைத்த இத்தனை ஆத்மாக்களை நான் எப்படித் திரு ப்தி செய்வேன்?"......என்று கிருஷ்ணன் விக்ரகத் தடியில் கதறு கிருள்.

எந்த காலத்திலும், எந்த விஷயத்திலும் பொது மக்கள் ஒரே அபிப்பிராயத்துடன் நடப்பது கிடையாது என்ற தத்துவம் உலக மறிந்ததே.........இச்சன்னியாசினியை பூஷிக்கும் கோஷ்டிகளைப் போல் தூஷிக்கும் கோஷ்டிகளும் ஒருபுறம் இல்லாமலில்லை. "ஆமாம்.........இதெல்லாம்.........வேஷம்.......இப்படி எல்லாம் செய்து மக்களை மயக்கி நம்ப வைத்து பிறகு கம்பி நீட்டிவிடுவான் பாருங்களேன்..........பத்து நாளைக்கு ஏழைகளுக்குப் போடுவது போல் போட்டுவிட்டு இப்போது பண்டங்களை எல்லாம் விற்றுப் பண மாக்கி இருப்பாள். திடீரென்று கொள்ளை போய்விட்டதோ? .......இது வெறும் ஹம்பக்கு......இவள்தான் உலகை ஏமாற்றும் பெருங் கள்ளி..............என்று சில அயோக்கியர்கள் பேசிக்கொண் டது சன்னியாசினியின் காதில் நெருப்புத் தணல்போல் விழுந்த உடனே "ஹா..........கிருஷ்ணு! கிருஷ்ணு!.........இம்மாதிரியான அபவாதங்கள் அணுகாமல் என்னை ரக்ஷிக்கும்படி சதா கதறியும்

என்மீது இரக்கமில்லாது போய்விட்டதே.........ஐயோ! என் பரிசுத்தம் உனக்குமா தெரியவில்லை!" என்று கண்ணீர் பெருகக் கதறியவாறு கிருஷ்ணன் படத்திற்கு முன் மூர்ச்சையுற்று விழுந்து விட்டாள்.

---

## 3-வது அதிகாரம்

### சிதறிய காதலும் பதறிய நெஞ்சமும்

"சௌதாமினி!.......சௌதாமினி!......... நீ சொல்வது உண்மையான வார்த்தையா? உன் இருதய பூர்வமாகச் சொல்லும் வார்த்தையா இது! உன் வாயிலிருந்து இப்படி வரும் என்று நான் சற்றும் எதிர்பார்க்க வில்லையே......சௌதாமினி.............இதோ பாரு, என்னைப் பாரு...........என்று டாக்டர் ஹரிநாத் மிகவும் கனிந்த அன்புடனும் ஒருவித பர பரப்புடனும் கேட்டார்.

சௌதாமினி "டாக்டர்...........டாக்டர்.........உண்மையில் என்னிதயபூர்வமாகவே சற்றும் வித்தியாசமின்றி கூறுகிறேன்... ......உங்களுடைய கல்யாணத்தை நான் பரிபூர்ண த்ருப்தியுடன் விரும்பி எதிர்பார்க்கிறேன். ஏன் இது பரியந்தம் இவர் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்றும் நினைத்ததுண்டு. இன்று இச் செய்தியைக் கேட்க என் மனம் என்னை மீறிப் பூரிக்கிறது.

ஹரிநாத்:—சௌதாமினி!.......சௌதாமினீ! ஆனால்.........நீ என்னை............

சௌதா :—டாக்டர்...........டாக்டர்..............அறிந்துகொண்டேன்......இவ்வார்த்தையை இம்மட்டுடன் நிறுத்திவிடுங்கள்....... நான் மகா பாவி......உலகத்தில் ஜீவித்திருப்பதற்கே அருகதையற்றவள். ஆனால் என்னையும் நம்பி இரு ஆத்மாக்கள் அண்டிப்

பிழைக்க வேண்டுமென்ற தலைவிதியை என்மீது அக்கடவுள் சுமத்தி விட்டதால் நான் எனக்கென வாழாது பிறர்க்கென வாழ்கிறேன்... ......இஜ்ஜென்மம் சாபல்யமடையும் பொருட்டு பிறர்க் குதவும் தொழிலையும் மேற்கொண்டேன்......என்று கூறும்போது கண்ணீர் முத்துக்கள் போல் உதிர்ந்துவிட்டது.

ஹரிநாத்:—சௌதாமினீ!.........நீ சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லையே.... நீ சொல்வதைப் பார்த்தால் உனக்குள் ஏதோ மர்மம் இருப்பதாக வன்றோ தோன்றுகிறது. சௌதாமினி! நமக்குள் இத்தகைய நெருங்கிய சிநேகமும் பழக்கமும் உண்டாகிய நாள் முதலாக இம்மாதிரி ஏதோ ஒரு ரகஸ்யம் உன்னிடம் இருக்கும் என்று நான் கனவிலும் கருதவில்லையே......சமூகமும் மற்ற உற்றார் பெற்றோரும் நம்முடைய ஆழமான காதலுக்குத் தடையாக அமையக்கூடும் என்ற ஒன்றை மட்டும் நான் எதிர்பார்த்த துண்டு. அப்படியே முட்டுக்கட்டையாக விருப்பினும் உன்னை நான் தற்கால சட்டப்படி ரிஜிஸ்டர் விவாகமாக செய்து கொண்டு சந்தோஷமாக விருப்பது என்றல்லவோ நினைத்தேன்......சௌதாமினீ! உன் வார்த்தையிலிருந்து நான் பெரிய ஏமாற்றத்தை யடைந்து விடுவேன்போல் தோன்றுகின்றதே......

சௌதாமினி!......சௌதாமினி!.....ஏன் கண்ணீர் விடுகிறாய்? என்னை மணக்க உனக்குச் சம்மதமில்லையா? என்னை நீ நேசிக்கவில்லையா!......அப்படி இருக்குமாயின் அதையும் தாராளமாகக் கூறிவிடு......வீணாகக் கண்ணீர் விட்டுக் கலங்காதே......சௌதாமினி!... உன் ரகஸ்யந்தான் என்ன?......அதைச் சொல்லிவிடு......என்று மிகவும் விசனத்துடனும், கரை புரண்ட காதலுடனும் கெஞ்சிக் கேட்டான்.

சௌதாமினி:—டாக்டர்! இக்கேள்விக்குப் பதல் சொல்ல என்னால் முடியவில்லை. என்னை ஏதோ செய்கிறது. தாங்கள் நினைப்பது போலவே என்னுடைய வாழ்க்கையில் வெகு கொடிய பயங்கரமான ரகஸ்யம் சூழ்ந்து கொண்டிருக்கிறது. அதைத் தாங்கள் அறிய விரும்புவது சகஜமே...ஆனால் அறியாதிருப்பதைப் போன்ற

நன்மை வேறெதுவுமில்லை. எப்போதும் இந்த அனாதையின்மீது தங்கள் அன்பு மட்டும் இருக்குமாயின் போதும்.

ஹரிநாத்:—சௌதாமினி! உன் மொழிகள் எனது மனக்கிளர்ச்சியையும் ஆவலையும் அதிகப் படுத்துகின்றதேயன்றி சமாதானங் கொடுக்கும் வழியிலில்லை. சௌதாமினி! நீ சொல்வது போலவே இம்முறை உனது ரகஸ்யத்தைக் கூறுவிடினும் நான் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் நீ பதில் கூறுவாயா!......இதோ பாரு!...... சௌதாமினி!......உண்மையில் கடவுளறிய நான் உன்னைக் காதலிக்கிறேன். என் வாழ்நாளில் உன்னைவிட உயர்ந்த பொருள் வேறு ஒன்றுமே இல்லை என்று உறுதியாகக் கூறுகிறேன். நீயும் அப்படியே நேசிப்பதாக வன்றோ நான் நம்பி இருக்கிறேன். நீ உனது ரகசியத்தைக் கூறுவிடினும் உனது அருமையான காதல் என்னிடம் இருக்கிறதா, இல்லையா! அதையாவது சொல்லக் கூடாதா?

சௌதாமினி:—டாக்டர்! என்னுடைய இருதயத்தின் வேகத்தை நம்மைப் படைத்த கடவுள்தான் அறிவார். காட்டில் உயர்ந்த புஷ்பங்கள் கொத்து கொத்தாகப் பூத்தென்ன பலன்? இரு கண்களும் தெரியாத குருடனை சிங்கார மாளிகையில் வைத்தென்ன பலன்?.........

ஹரிநாத்:—சௌதாமினி!.......சௌதாமினி!....... .இப்போது அறிகிறேன். நீ யொரு கேவலமான ஏழைக் குடும்பத்துப் பெண் என்றும், அதிலும் நர்ஸ் தொழில் செய்பவள் என்றும் நான் உயர்ந்த செல்வம் மிக்க குடும்பத்துச் சீமானென்றும், பெரிய டாக்டர் என்றும் வித்தியாசங்களை நீ பாராட்டுவதாக அறிகிறேன். சௌதாமினி! நீ நினைக்கிறபடி உலகத்தில் உண்மையான நிலைமையை யறியாத மக்கள் நினைக்கக் கூடுமேயன்றி உண்மைக் காதலை யறிந்தோர்கள் அப்படி நினைக்கவே மாட்டார்கள். என் விவாகத்தை நான் எந்தனை வெறுக்கிறேன் என்பதை என் மனந்தான் அறியும். நீ அதைப் பற்றி மிக்க சந்தோஷப் படுவதாகக் கூறிவிட்டாய்......

சௌதாமினி! நீ நினைப்பது போல் நான் நினைக்கவில்லை. என் காதல்தான் எனக்கு ப்ரதானமாகத் தோன்றுகிறது. நீ இஷ்டப்

பட்டால் இந்த நிமிடமே நாம் விவாகம் செய்து கொண்டு கண் காணாத தேசத்திற்குப் போய்விடலாம்......

சௌதாமினி:—டாக்டர்! நீங்கள் இம்மாதிரி சொல்வது மிகவும் பிசகு. நீங்கள் இம்மாதிரி ஒரு சொந்த சந்தோஷத்திற்காக உங்கள் குடும்பத்தையே நாசமாக்குவதற்கு எந்த அறிவுள்ளவர்களும் சம்மதிக்க மாட்டார்கள். எத்தனை ஆவலுடன் உங்களை உங்கள் மாமன், மாமிகள் நேசிக்கிறார்கள் என்பதை நீங்கள் சற்றும் எண்ணவே இல்லை. உங்களின் வாழ்க்கையும் சந்தோஷமுந்தான் அவர்களுடைய ஜீவ நாடி......உங்களுடைய சந்ததி விருத்தியை எதிர்பார்த்து ஏங்கும் 'அவர்களை த்ருப்தி செய்வதுதான் நீங்கள் செய்யவேண்டிய முதல் கடமையாகும். இதிலிருந்து நீங்கள் விலகுவதாக இருந்தால்கூட நான் உங்களை என்னுடைய இருதய பூர்வமாய், ஆத்மார்த்தகமாய் நேசிக்கும் முறையில் தடுத்தே தீருவேன்......இது எனது கடமை. தீய வழியில் செல்பவர்கள் யாரா யிருப்பினும் அதைத் தடுத்து நல்வழிபடச் செய்யவேண்டியது ஒவ்வொரு மனிதருடைய கடமையாகும். டாக்டர்!.........உங்கள் மாமன் உங்களை நேசிப்பது ஹிமாசலத்திற்கு ஒப்பானது. நீங்கள் அத்தகையவர்களை த்ருப்தி செய்யாவிடில் மேற்குறித்த ஹிமாசலம் போன்ற பாபத்தைச் செய்தவர்களாவீர்கள். அதோடு ஒரே வார்த்தையில் கூறிவிடுகிறேன். நாம் இருவரும் நேசிக்கிறோம் என்பது நம்மைத் தவிர பிறருக்குத் தெரியாதென்றே நினைக்கிறேன். இதை உங்கள் மனிதர்கள் அறிந்தால் முதலில் என்னை இவ்வூரைவிட்டு ஓட்டிவிடவும் துணிவார்கள். இதுகாறும் நேசமாயிருந்த உங்களையும் பகிஷ்கரிக்கத் துணிவார்கள். இதுமட்டும் ஞாபகத்திலிருக்கட்டும்.

183002

ஹரிநாத்:—(திடுக்கிட்டவனாய்).........சௌதாமினி! என்ன! என்ன!......உன்னை ஊரை விட்டு ஓட்டி, என்னை பகிஷ்கரிப்பார்களா!......ஏன் அப்படிச் செய்யவேண்டும்? அத்தனை கொடுமை செய்வதற்கு நீ செய்துள்ள குற்றந்தான் என்ன? நீ புத்தியில் குறைந்தவளா என்ன? ஜாதியில் தாழ்த்தப்பட்டவளா? அன்றி ஒழுக்கங் கெட்டு இழுக்கத்தில் உழல்பவளா! ஜாதி ப்ரஷ்டம் செய்யப் பட்டவளா? அல்லது துர்வியாதியால் பீடிக்கப்பட்டவளா? எதற்காக உன்னை அத்தனை கடுமையாக வெறுக்கவேண்டும்? இனிமேல் இதை அறியாதிருக்க முடியவே முடியாது. உடனே சொல்லிவிடு......சௌதாமினி!......சௌதாமினி...... என்று கெஞ்சியவாறு கேட்டான்.



சௌதாமினி:—டாக்டர்! தங்களுடைய முன்னறி தெய்வமாகிய பிதாவின் மரண காலத்து உயிலை மறந்துவிட்டீர்களா! அவர் உயிருடன் இல்லா விடினும் அவருடைய கோரிக்கையைத் தாங்கள் பூர்த்தி செய்ய வேண்டியது கடமை இல்லையா!

அந்த மகத்தான விஷயத்தை மறந்துவிட்டீர்களா? ... இந்த கேள்வி ஹரிநாத்தின் காதில் விழுந்தவுடனே அவன் தலை கிற்றெனச் சுழன்றது. சில விநாடிகள் இருந்த இடத்தில் தம்பித்துவிட்டான். அவனுடைய 12-வது வயதில் அவனுடைய பிதா மரணப் படுக்கையில் கிடக்கும்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள் முற்றும் அப்படியே கண் முன்பு காட்சி

கொடுக்க வாரம்பித்தன. இச்சந்தர்ப்பத்தில் நாம் ஹரிநாத்தின் பூர் விகத்தை இங்கு தெரிவிக்கவேண்டியது அவசியம்.

ஹரிநாத்தின் பெற்றோர்கள் பூர்வத்தில் மிகவும் ஏழைகளாக குடிசையில் வாழ்ந்தவர்கள். ஆனால் ஒழுக்கத்தில் அவர்களை விடச் சிறந்தவர்கள் யாருமில்லை என்ற பெயர் பெற்றவர்கள். அவர்களுக்கு எந்த விதம் தாம் பிழைக்க வழி தேடுவது என்ற ஏக்கம் உண்டாகி விட்டது. ஹரிநாத்தின் பிதாவாகிய நீலகண்டத்திற்கு சில வட நாட்டினரின் சிநேகிதம் கிடைத்ததால் ஹிந்தி பாஷை வெகு சுலப மாகப் பேச வந்து விட்டது. நீலகண்டன் சிறிய தோட்டம் ஒன்று சொந்தத்தில் வைத்து காய்கறிகள் பயிரிட்டு வியாபாரம் செய்து வந்தார். திடீரென்று உண்டாகிய பெருங் காற்று மழையினால் தோட்டம் அடியோடு அழிந்து மகத்தான நஷ்டம் வந்துவிட்டது. ஜீவனத்திற்கே மிகவும் திண்டாட்டமாகிவிட்டது. மனம் தவித் திருந்த சமயம் சிறிது கடனும் உண்டாகியதால், கடன்காரருக்குப் பயந்து கொண்டு மனைவியைத் தாயார் வீட்டில் விட்டுவிட்டு ஊரை விட்டு ஓடிவிட்டார்.

அக்காலையில் அவர் பலரிடம் நேசங்கொண்டு தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பாஷைகளை நன்கு பேசக் கற்றுக் கொண்டு சாமியார்போல் தாடியும், மீசையும் வளர்த்துக்கொண் டார். அதன் பிறகு தமிழ்நாடு, கேரளம், ஆந்திர தேசம் முதலிய ஊர்களிலிருந்து வட இந்தியா யாத்திரை செய்யும் யாத்திரை கோஷ்டிகளை அழைத்துச் சென்று அந்தந்த பாஷைகளின் உதவி யால் ஸ்வாமி தரிசனமும், புண்ணிய நதிகளின் ஸ்நானமும் செய் வித்து அவர்களுக்கு எத்தனை சௌகர்யங்கள் செய்து கொடுக்க முடியுமோ, அத்தனையும் செய்துகொடுத்து யாத்ரீகர்களின் பரி பூர்ணமான அன்பைப் பெற்றுவிட்டார்.

யாத்ரீகர்கள் மிகவும் சந்தோஷத்துடன் அவருக்குப் பகுமா னங்கள் கொடுத்துச் சென்றார்கள். சில காலத்திற்குள் இதுவே ஒரு பெரிய தொழில்போலாகிவிட்டதால் இந்த வழியில் பலதரம் ஊர்கள் ப்ரயாணமும், வரும்படியும் ஏற்பட்டுவிட்டன. வெளியூர்க

வில் சத்திரக்காரர்கள், கடைக்காரர்கள் இன்னுமற்ற சகலரும் அதிக பழக்கமாகிவிட்டதால், யாத்ரீகர்களை அடிக்கடி அங்கு அழைத்து வந்து வியாபாரம் வ்ருத்தியாவதால் அவர்களிடம் கமிஷன் வாங்கத் தொடங்கினர்.

சுமார் 7, 8 வருடத்திற்குள் இதே தொழிலில் ஈடுபட்டு சுற்றியலைந்து கொஞ்சம் பணத்தைச் சம்பாதித்துவிட்டார்.

அடிக்கடி ரயில் ப்ரயாணம் செய்வதால் தேக அசுகம் ஏற்பட்டுவிட்டது. சேகரித்துக்கொண்ட பணத்துடன் ஊர் திரும்பி வந்தார். பழைய கடன்காரர்களுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுத்துவிட்டு முன்னிலும் அதிக நாணயக்காரன் என்ற பெயரைப் பெற்றுவிட்டார்.

கையில் மிச்சமிருந்த பணத்தினால் ஒரு உத்தமமான பெரியாரின் கூட்டுறவில் ஜவுளிக்கடை வியாபாரத்தை ஆரம்பித்தார். 'செல்வம் வருவதும் போவதும் ஆறிடு மேடு மடுவுபோல ஒருவருக்கும் தெரியாதல்லவா!' எந்த மனிதர்களும் ஏழ்மையால் என்றும் கஷ்டப்பட்டுக்கொண்டே இருந்ததில்லை. அதுபோல பரம்பரையாக சுகப்பட்டவர்களும் அரிதே. ஜெயலக்ஷ்மியின் கடாக்ஷம் பிறந்துவிட்டால் தொட்ட மண்ணும் தூய பொன்னாகிவிடுமன்றோ!

நீலகண்டனும், நீலமேகனும் சேர்ந்து ஆரம்பித்த சுபமுகூர்த்தத்தின் பலனாக சிறிய கடையாக வைத்தது பெரிய ஷாப்பாகும் நிலைமைக்கு சில வருடங்களுக்குள்ளேயே வந்துவிட்டது. நீலகண்டன் ஓர் பெரிய ப்ரபுவின் ஸ்தானத்திற்கு உயர்ந்துவிட்டான். பெரிய மாடி வீடு, அதற்குத் தகுந்த பலவித அந்தஸ்தும் உயர்ந்துவிட்டன. சம்பத்து விருத்தியுடன் சந்தானமில்லையே என்ற குறையும் உண்டாகியது. ஆனால் அக் குறையை கடவுள் அதிக நாள் வரையில் வைக்கவில்லை. வெகு விரைவிலேயே கலி தீர்க்கும் கண்மணியாய் நமது ஹரிநாத் உதயமாகிவிட்டான். இவன் பிறந்த வேளை வியாபாரம் அமோகமாக விருத்தியடைந்தது.

சந்தோஷம் அதிகமாகிவிட்டால் என்றும் அது நிலைத்து இருப்பது மனித வாழ்க்கையில் சாச்வதமில்லையல்லவா! ஏதேனு

மொரு சிறிய மனக்கலக்கமோ, விசனமோ ஏற்பட்டுவிடுவதுதான் உலகத்தில் நடக்கும் இயல்பு. அதேபோல் ஹரிநாத்தின் 5-வது வயதிலேயே அவன் அன்னை புத்திரபாக்யம் பெற்றும் பரிபூர்ண மாக அனுபவியாமல் குழந்தையையும், தன் உத்தமக் கணவனையும் பிரிந்து உயிர் நீத்துவிட்டாள். நீலகண்டனுக்கு இந்த விசனம் ஒன்று போதாதா?

ஹரிநாத் குழந்தையாகையால் அதிகமாய் விசனத்தை யனுப விக்கும் சக்தி இல்லை எனினும் தாயின் பிரிவு என்றால் எத்தகை யோரையும் ஒரு ஆட்டு ஆட்டிவைக்குமல்லவா! தாயின் அன்பும் தாயின் பரிசுத்தமான தரிசனமும் இனி யாரிடம் காண முடியும்? அந்தம்மாள் தான் சாவதற்கு முன்பு தன் சகோதரனையும், சகோ தரன் மனைவியையும் அழைத்துத் தன் குழந்தை ஹரிநாத்தையும் கணவனையும் அவர்கள் கையில் ஒப்படைத்துவிட்டு "அண்ணா! மன்னீ! என் முடிவு சமீபித்துவிட்டது. ஹரிநாத்தையும் அவ னுடைய பிதாவையும் கைவிடாமல் காப்பாற்றுங்கள். நீங்கள்தான் அவனுக்கு கதி. எங்கள் சொத்து பூராவும் என் கணவரின் சுயார் ஜிதமாகையால் இதற்கு எந்த பங்காளியையும் அண்டவிடாமல் பார்த்துக் காப்பாற்றிவிடுங்கள்.

மன்னீ! உனக்கொரு குழந்தை பிறக்குமாவென்று ஏங்கி னேன். கடவுள் கிருபையால் குழந்தை பிறக்கும் பாக்யம் கிடைத் தும் நான் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லை. உன் கருப்பத்திலிருக் கும் குழந்தை பெண்குழந்தையாகப் பிறக்கவேண்டுமென்று கடவுளை ப்ரார்த்தனை செய்கிறேன் அப்படிப் பிறக்குமாயின் அந்த குழந் தையையே ஹரிநாத்திற்குக் கல்யாணம் செய்து கொடுப்பதாக எனக்கு சத்தியம் செய்து கொடுங்கள்...

நாதா! அக் குழந்தையையே ஹரிநாத்துக்கு மணம் செய்து வைப்பதாக வாக்குக் கொடுங்கள். என் ஆத்மா சாந்தியடையும்" என்று கேட்டாள். அவ்வாறே இருவரும் செய்துகொடுத்தார்கள். அவளுடைய விருப்பத்தின்படியே ஹரிநாத்தின் மாமிக்கு பெண் குழந்தையே பிறந்தது. ஹரிநாத்தை அவன் மாமியும், மாமனும்

தம் குழந்தையைவிட அதிகமான ப்ரீதியுடன் வளர்த்து வந்தார்கள். ஹரியும், ஊர்மிளா வும் வெகு சந்தோஷமாக பால்ய சிநேகிதர்களாய் விளையாடி மகிழ்ந்து வந்தார்கள்.

ஹரிநாத் முறையே பள்ளிக்கூடத்தில் படித்துவந்தான். அவனுடைய சுறுசுறுப்பையும் புத்திசாலித்தனத்தையும் உபாத்தியாயர்கள் கொண்டாடினார்கள். விளையும் பயிர் முளையிலே என்றபடி ஹரிநாத்தின் புத்தி விசாலம் அமைந்தது. அவனுடைய இந்த அபார புத்திசாலித்தனத்தை தந்தை கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். ஹரிநாத்தின் 12-வது வயதில் நீலகண்டனுக்கு எலும்புருக்கி நோய் கண்டு வெகு விரைவிலேயே அவனை விழுங்கிவிடும் சுயாட்சி பெற்றுவிட்டது.

இதை யறிந்த நீலகண்டன் தனக்குப் பிறகு கூட்டு வ்யாபாரத்தினால் என்னென்ன சிக்கல்கள் வருமோவென்ற முன் யோசனையினால் தன் பாகத்தை வேறு ஒரு தகுமான பெரிய மனிதனுக்கு விற்றுவிட்டு ரொக்கமாக பணத்தை வாங்கிக்கொண்டார் ஏற்கெனவே உள்ள ஆஸ்தியுடன் இதையும் சேர்த்து மூன்று பேர் (Executors) காப்பாளிகளை சட்டபூர்வமாய் நியமித்துவிட்டார். அதில் ஹரிநாத்தின் மாமாவும் ஒருவர்.

தன் சுயார்ஜிதமான சொத்து பூராவும் இந்த காப்பாளர்களால் காப்பாற்றப்பட்டு ஹரிநாத்தின் மைனர் நீங்கிய பிறகு தக்க முறையில் அவனிடம் சேர்ப்பிக்கவேண்டும் என்றும், அவன் எந்த துறையில் விருத்தியடைய ஆசிக்கிறானோ அந்த துறையில் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், அவன் தாயார் மரணத்தறுவாயில் சொல்லியபடியே ஊர்மிளாவை விவாகம் செய்து வைக்கவேண்டுமென்றும், ஒருகால் ஹரிநாத்துக்கு ஏதாவது விபத்து நேரிடுமாயின் தன் சொத்துக்கள் பூராவும் தர்ம கைங்கர்யத்துக்குச் சேர்த்துவிடவேண்டுமென்றும், அந்த தர்மஸ்தாபனம் வெறும் சோறு போடும் தர்மமாக மட்டு மில்லாமல் ஏழை ப்ரம்மச்சாரி, கன்யாப் பெண்கள் இவர்களுக்குக் கல்யாணம் செய்துவைக்கும் தர்ம ஸ்தாபனமாக தக்க தர்மகர்த்தர்களைக்கொண்டு சாச்வதமாக அமைக்கவேண்டுமென்றும் தெளிவாக எழுதிவிட்டார்.

ஹரிநாத்தின் தாயார் இறக்குந் தறுவாயில் கூறியபோது ஹரிநாத் மிகச் சிறுவன். தந்தை இறக்கும்போதோ 12 வயது ஆகி விட்டதால் அவர் கூறிய ஒவ்வொரு வாக்கியமும் இவன் மனத்தில் நன்கு பதிந்துவிட்டது. "கண்ணே! ஹரிநாத்!... இனிமேல் மாமன் மாமிதான் உனக்குத் தாய்தந்தையர்கள். அவர்களின் இஷ்டப் படியே மனங்கோணுமலும் புத்திசாலியாயும் உலகமெல்லாம் கொண் டாடும்படி நற்பெயருடனும் நடந்துகொள்ளு.

மாமன் மகள் ஊர்மிளாவையே கல்யாணம் செய்துகொண்டு உன் தாயாரின் வாக்கைப் பரிபாலனம் செய்து, அவள் ஆன்மாவைத் திருப்திப் படுத்து. அதுதான் என் விருப்பம். ஒழுங்கு தவருதே. ...யோக்யன் என்ற பெயர் எடுத்து வாழு. தெய்வபக்தியோடு இரு. பரோபகாரமானதும், மிகவும் உபயோகமானதுமான வைத்தியத் தொழிலைப் பழகினல் நலமாகவிருக்கும். இதுதான் என் விருப்பம். பிறகு உனக்கெது ப்ரியமோ அதைச் செய்...என்று பல அரிய புத்திமதிகளைக் கூறிக் காலமாகிவிட்டார். அந்த நினைவுகள் ஹரி நாத்தின் மனத்தில் பதிந்திருந்தும் சிற்சில விஷயங்களில்—சமயங்க ளில்—அவைகளை மறந்துவிடும்படி நேரிட்டது. சௌதாமினி தந் தையின் உயிலை ஞாபகப்படுத்தியதும் அவனுக்குத் தன் தந்தையின் மரணப் படுக்கையும், தாயின் வாக்கும் நன்ருக மனத்தில் தைத்தன. பளிச்சென்று ஞாபகம் வந்துவிட்டது.

சில நிமிடங்கள் தம்பித்துவிட்டான். இந்த பழங்காலத்து காக்ஷிகள் கண் முன்பு தோன்றும்போது தன் தாய்தந்தையர்களின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யாமல் தான் தவருன வேறு வழியில் செல்ல உத்தேசித்ததை தன் பெற்ருேர்கள் அறிந்துகொண்டு தன்னை மிரட்டுவதுபோலும், பரிதாபமாகப் பார்ப்பதுபோலும் பலவித மான ப்ரமைத் தோற்றங்கள் தோன்றிவிட்டதால் அசைவற்று உட் கார்ந்துவிட்டவன் சற்று நேரம் சென்ற பிறகே சிறிது தெளிவு பெற்ருன்....

உடனே ஏதோ ஒரு ஆவேசம் கொண்டவனைப்போல்"சௌதா மினி! சௌதாமினி!! சரியான சமயத்தில் என் கண்ணைத் திறந்து

வைத்தாய். நான் எனது சொந்த சந்தோஷத்திற்காகப் பெரியோர்களின் வாக்கை மதிக்காது மீறிவிடத் துணிந்தேனே!.... "சௌதாமினி! நான் எத்தனைதான் என் பெரியோர்களின் மனத் திருப்திக்கு நடந்துகொண்டபோதிலும் என் இதயத்தைக் கொள்ளை கொண்ட ராணி நீதான் ... அந்த தனிப் பெரும் சக்தி உன்னிடந்தானிருக்கிறது. என்னிதய பூர்வமாய் உன்னைக் காதலிக்கிறேன்....ஊர்மிளாவை மாமன் மகளாக மட்டும் அன்பு கொள்கிறேன். இதை இந்த ஜென்மாவில் இனி மாற்ற முடியாது இது என்னுயிருடன்தான் மாறவேண்டும்.

சௌதாமினீ! நீ மகா புத்திசாலி என்பதை பலமுறைகளில் அறிந்திருந்தும் இப்போதுதான் அதை நிதர்சனமாகக் கண்டேன் என் ஹ்ருதய ராணீ! தெய்வ சங்கல்பம் எப்படி இருக்கிறதோ, அப்படித்தான் யாவும் முடியும். ஆதியிலேயே என் வாழ்க்கைக்கு ஓர் வழியை ஏற்படுத்திவிட்ட கடவுள் என்னை சோதிப்பதுபோல் இந்த புதிய காதலை ஏன் என்னுள் புகுத்தி வருத்தவேண்டும்.... நான் காதலுக்குக் கட்டுப்படுவதா! பெற்றோரின் மரணச் சொற்களை நிறைவேற்றக் கடமைப்படுவதா?

அந்தோ! கஷ்டம்! கஷ்டம்...என்று ஹரிநாத் வருந்துவதைக் கண்ட சௌதாமினி "டாக்டர்! இதென்ன அறியாமையினால் பேசுகிறீர்கள்? "கஷ்டத்தை சகித்து ஜெயிப்பவர்களன்றோ உண்மை மனிதத்தன்மையை அடைந்தவர்களாக முடியும்? அதோடு டாக்டர் தொழிலில் ஈடுபட்டுள்ள உங்களுக்கு நான் சொல்ல வேண்டுவது ஒன்றுமில்லை. உலகத்தில் உள்ள சகல விதமான தொழில்களின் மூலமும் அத் தொழிலாளிகள் அததிலிருந்து, ஒவ்வொரு நுணுக்கத்தையோ, அறிவையோ, பாடத்தையோ, அனுபவத்தையோ, உணர்ச்சிகளையோ....ஏதோ ஒன்றைக் கட்டாயம் அறிந்து கொள்ளமுடியும்.

எல்லாத் தொழில்களின் மூலம் அறியும் விஷயங்களைவிட வைத்தியத் தொழிலிலும், நர்ஸ் தொழிலிலும் ப்ரத்யேகமான பல படிப்பினைகளையும், வாழ்க்கையின் விசித்திரங்களையும், நூதன உணர்ச்சிகளையும் அடைய முடியும். அதாவது சுருக்கமாகக் கூறின்

ஒரே வார்த்தையில் முடித்துவிடலாம். "பிறருடைய கஷ்டங்களை சதா கண்டு அதிலேயே மூழ்கி, அவர்களின் கஷ்டத்தைத் தீர்க்கும் முறையில் நாமே அவர்களாக மாறிவிடவும், முடியுமானல் செய்வோம். அத்தகைய மனப்பான்மையுடன் நம் தொழில் அமைந்திருப்பதால் நமக்கு சொந்த கஷ்டங்கள், விசனங்கள் ஒன்றையும் தனியே அனுபவிப்பதென்றதே இல்லாது போய்விடுகிறது.

சதா சந்தோஷத்திலிருப்பவர்களுக்கன்றோ ஒரு சிறு வருத்தமும் தாங்க முடியாது. நமக்கு சதா பிறர் கஷ்டத்தையே பார்த்துப் பார்த்து கஷ்டத்தைச் சகிக்கும் பரிபக்குவம் ஏற்பட்டுவிடுகிறதன்றோ! இதுபோன்ற அனுபவம் வேறு இதர தொழில்களில் அடைய முடியுமா! ஆகையால் கஷ்டத்தைக் கொடுத்த கடவுள் சகிப்புத் தன்மையையும் கொடுப்பாரல்லவா?

ஹரி :—ஹா....அன்பே!....சௌதாமினீ!...உன்னுடைய அருமையான புத்திசாலித்தனத்தையும், அரிய வார்த்தைகளையும் கேட்கக் கேட்க என்னை மீறி என் மனக் கிளர்ச்சி அதிகரிக்கின்றதேயன்றி குறையமாட்டேனென்கிறது...என்னைவிட சொல்ப கால நர்ஸ் அனுபவத்திலிருந்து நீ கண்டுகொண்ட இந்த சிறந்த தத்துவம் நீண்ட நாள் வைத்திய அனுபவத்திலிருக்கும் என் மூளையில் உதயமாகவில்லையே! நீ சொல்லிய பிறகு அது உண்மை என்று தோன்றுகிறது...உன்னறிவே அறிவு ...என்று பேசிக்கொண்டிருக்கையில் ஹரிநாத்தின் மாமா அவ்விடம் வருவதைக் கண்டு, ஹரிநாத் பய பக்தி விசுவாசத்துடன் எழுந்து நின்றான் சௌதாமினியும் அடக்க ஒடுக்கமாகத் தலைகுனிந்து நின்றாள்.

ஹரிநாத் தன் மாமா இங்கு வருவார் என்று சற்றும் நினைக்கவில்லை ஏனெனில் அவனுடைய கன்ஸல்டிங் ரூமுக்குள் நோயாளிகளும், வைத்தியம் சம்மந்தப்பட்டவர்களும் தவிர வேறு யாருமே வராததினுல் இது திடும் ப்ரவேசமாகி அவனைச் சற்று அசக்கிவிட்டது. அவன் இப்போது எப்படி நடந்துகொள்வதென்று சற்று ப்ரமித்துவிட்டான். சௌதாமினியின் மார்பும் படபடவென்று அடித்துக்கொள்ள வாரம்பித்தது. என்ன செய்வார்கள் பாவம்!....பலவித சோதனைகளில் இதுவும் ஒன்றல்லவா!

---

## 4-வது அதிகாரம்

## வெடித்திடும் இதயம்—விஷபாண ப்ரயோகம்

"இன்னும் சௌதாமினி வரவில்லையே, எங்கு சென்றிருப்பாள்?" என்று அவளது தாதாவுக்குச் சற்று யோசனை தோன்றிவிட்டது. தனியே அவள் எங்கும் செல்வதே வழக்கமில்லையாதலால் வீதித் திண்ணையில் உட்கார்ந்தபடியே பேத்தியை எதிர்பார்த்திருந்தார்...

அப்போது மாலை நேரமாகையினால் நாம் முன்பு தெரிவித்த பொருமைக்கார நர்ஸ்கள் நால்வரும் ஒய்யாரமாகவும் அகம்பாவத் துடனும் ஷோக்காக வீதியில் போய்க்கொண்டிருப்பதைக் கண்ட கோகிலா அவர்கள் முன்பு ஓடிப்போய், "...எங்க அக்கா எங்கே?.... அவ இன்னும் வரல்லையே! நீங்க பாத்தீங்களா?" என்று ஆவலோடு கேட்டாள்.

இதைக் கேட்ட நர்ஸ்கள் அலக்ஷியமும், திமிரும் கலந்த பார்வையுடன் கபகபவென்று சிரித்துக்கொண்டே "ஏண்டீ! இன்னுமா வீட்டுக்கு வல்லெ"....என்றாள் ஒருத்தி. மற்றொருத்தி "டாக்டரம் மாளே காக்கா பிடிக்கப் போயிருப்பா". என்றாள். வேறொருத்தி "டாக்டர்தான் ஆஸ்பத்திரியிலேயே இருக்கிறரே!...அந்த டாக்டர் ஹரிநாத்தினிடம் குலாவப்போயிருப்பாள்....அவன் ஒரு தடியன் இருக்கிறனே!" ... என்றாள். இதையாமோதித்த எல்லோரும் "ஆம் .... ஆம்...அங்குதான் போயிருக்கலாம். இதில் சந்தேகமென்ன?!....என்று கூறி, கடகடவென்று சிரித்தார்கள்.

இந்த அர்த்தமாகாத வார்த்தைகளைக் கேட்ட கோகிலாவுக்கு முற்றும் விளங்கவில்லை எனினும் தன் அக்காளைப் பற்றி ஏளன

மாகக் குறிப்பிட்டுக் கூறுகிருர்கள் என்று மட்டும் தெரிந்து கொண்டாள். முகத்தில் ஒருவிதமான விசனக் களேயும், திரு திரு என்று விழிப்பும் உண்டாகி விட்டன.

வீதித் திண்ணைமீது உட்கார்ந்திருந்த கிழவரின் காதில் இந்த திமிர் படைத்த நால்வர் பேசிய வார்த்தைகள் சுறுக்கென்று ஈட்டி குத்துவதுபோல் தைத்தன. "கோகிலா! இங்கே வா. அடக்க மற்ற அலகைகளிடம் உனக்கென்ன பேச்சு?" என்று அழைத்தார்.

உடனே கோகிலா வந்து தாதாவின் பக்கத்தில் உட்கார்ந்தாள். தாதா அவளே நோக்கி "அம்மா! உனக்கு டாக்டர் ஹரிநாத்தின் வீடு தெரியுமா?" என்ருர்.

கோகிலா :—ஓ! தெரியும் தாதா! நான் ஓரமாவே போயி அக்கா இருக்கிருளான்னு பாத்து வரட்டுமா!

கிழவர் :—சமயல்காரியை அழைத்துக்கொண்டு சமத்தா போய் பாத்து, இருந்தா அழைத்துவாம்மா!...என்ருர். உடனே கோகிலா சமயல்காரியுடன் கிளம்பி டாக்டர் வீட்டிற்குச் சென்ருள்.

வீதி கேட்டில் சென்று வேலைக்காரனை விசாரித்ததில் உள்ளே இருப்பதாயும், இப்படி உட்காரும்படியும் அவன் தெரிவித்தான். இதை ஹரிநாத்தின் மாமா கவனித்தபிறகே சௌதாமினியைக் கூப்பிடுவதற்காக உள்ளே வந்தார். முன்பு தெரிவித்ததுபோல் இருவரும் கலங்கிவிட்டதையறிந்த ஜகதீசன் (மாமாவின் பெயர்) "ஹரிநாத்! இந்தம்மாளைத் தேடிக்கொண்டு ஆள் வந்திருக்கிறது." என்று சாந்தமாகவே சொன்னர்.

ஹரிநாத் மிக்க சாமர்த்தியத்துடன் சௌதாமினியைப் பார்த்து "சரி! நீங்கள் சென்றுவாருங்கள்...அந்த நோயாளியிடம் நான் சொல்லியபடியே சொல்லி இவ்வித சிகிச்சை செய்தால்தான் குணமாகும்; இல்லையேல் ஆபத்துதான் என்று சொல்லிவிடுங்கள்" என்று தந்திரமாகக் கூறி அவளையனுப்பிவிட்டான்.

சௌதாமினி விடை பெற்றுச் சென்றபிறகு, ஜகதீசன் மிகுந்த ப்ரீதியுடனும், சுதந்திரமான அதிகாரத்துடனும் "ஹரிநாத்! உனக்கு நான் சொல்லவேண்டியது ஒன்றுமே இல்லை. நீ மகா புத்திசாலி. ஊரில் உன்னுடைய புகழ் ஒளியுடன் பரவி வரும்போது அதற்கு மாசு தேடும் செய்கையில் புகுந்து அபவாதத்தைத் தேடிக்கொள்ள லாமா! இந்த பெண்ணோ, மகா ரூபவதியாயும் இளமங்கையாயு மிருக்கிருள். இவளுடன் நீ என்னமோ வைத்திய முறையில் பழகினாலும், அவளைக்கூட உன் காரில் ஏத்தி அழைத்துச் செல்வதையும், இப்படி மணிக் கணக்கில் தனிமையில் பேசுவதையும் பிறர் கண்டால் அது உன்னுடைய இப்போதைய கவுரவத்திற்கு இழிவு உண்டாகுமல்லவா!

ஹரிநாத்!...உனக்கோர் இழிவு உண்டானல் அது என்னை யல்லவோ பாதிக்கும். இப்பொழுது எடுத்துள்ள பெயர் கெட்டு விட்டால் பிறகு தலைகீழாக நின்றாலும் அதை மீண்டும் மாற்ற முடியுமா! இத்தனை பெரிய மாமா இதைக் கண்டித்தாரு என்று என்னையும் சேர்த்துச் சொல்வார்களல்லவா! ஹரிநாத்!......உன்னை விட இவ் விஷயத்தில் ஏழைப் பெண்ணுகிய அவள் பெயருக்கு இதனல் ஒரு ஹானி வந்துவிட்டால் அவள் வாழ்வே வீணுகிவிடு மல்லவா.......அவளைக் கெடுப்பது தர்மமா?........

நீ மகா புத்திசாலியாகையால் இனிமேல் இம்மாதிரி செய்யாதே. உனக்குத் தனியாக ஓர் நர்ஸை வைத்துக்கொள்ளு. நம் வீட்டிற்கு வழக்கமாக இதுகாறும் வந்துகொண்டிருந்த பாக்யவதி இருக்கிருள்; அதிக அனுபவம் படைத்தவள், வயது 45 ஆகிவிட்டது அவளும் தன்னை கவனிக்கவில்லை என்று புகார் சொல்லுகிருள்....... நான் இம்மாதிரி சொல்கிறேனே என்று வித்யாசமாக எண்ணுதே. உரிமையுடன் சொல்லுகிறேன்" என்றுர்.

இதே சமயம் வீட்டிற்குச் சென்ற சௌதாமினியை அவள் பாட்டனர் "ஏனம்மா! சௌதாமினீ! இத்தனை நேரம் என்ன செய்தாய்?....நீ கேஸுக்கும், ஆஸ்பத்திரிக்கும் அன்னியில் தனிமையில் வேறு எங்கேயும் போவதில்லையே........அந்த டாக்டர் வீட்டிஉ

இத்தனை நேரம் உனக்கென்ன வேலை? அவர்களின் வயசென்ன, அந்தஸ்து என்ன, உன் நிலைமை என்ன? நீ இப்படிச் செய்வது பிறர் ஏளனமாகப் பேசுவதற்கு இடமில்லையாம்மா........அந்த நான்கு நர்ஸுகளும் வீதியில் நின்று, என் காது கேட்கக் கூறிச் சென்ற வார்த்தைகளால் என் இதயம் அப்போதுமுதல் தவிக்கின்றது. உனது க்ஷேமமும் நல்ல பெயருமல்லவா எனது உயிர்நிலை. உன்பொருட்டல்லவோ நான் இன்னும் உயிர்வாழ விரும்புகிறேன்.

சௌதாமினி! இவ்வுலகத்தின் தன்மையை நீ அறியமாட்டாய். அம்மா!......ஏன் கண்ணீர் விடுகிறாய்?.......நாம் வாங்கிக் கொண்டுவந்த வரன் இது. கண் கலங்காதே! என் செல்வமே!........ என் வயிற்றில் சங்கடம் தாங்க முடியவில்லை. நீ மகா புத்திசாலியாயிருப்பினும் ஒரு சிறு தவறும் நீ செய்யக்கூடாது என்றதனால் நான் சொல்கிறேன்....அம்மா....அழாதே''......என்று சௌதாமினியின் தலையைக் கோதி முதுகில் தடவிக்கொடுத்தார்.

கோகிலா தன் அக்காவின் முகத்தையும், தாதாவின் முகத்தையும் மாறி மாறிப் பார்க்கிறாள். அவள் முகம் என்னமோபோலாகிவிட்டது. ''ஏன் தாதா அக்காவெ கோவிச்சுக்கரே!....அக்கா அழுதா எனக்கும் அழுகை வரது. அக்கா! ஏன் நீ அழரே...... அழாதே''—என்று குழந்தையின் சுபாவத்துடன் கூறி, அவளையே நோக்கினாள்.

சௌதாமினிக்கோ மனத்தில் தாங்கமுடியாத வேதனையினால் சங்கடம் செய்கிறது. நர்ஸுகள் தாதாவின் காதில் படும்படி தன்னைப் பற்றி இழிவாகக் கூறியதும், தன்னுடைய எதிர்கால வாழ்க்கை எவ்வித முடிவில் வருமோ என்ற பயங்கரமும் ஒன்று கூடி அவளைக் கலக்கிவிட்டன. தான் அம்மாதிரி தனிமையில் பேசியது குற்றம் தான்....தனக்கு அதிர்ஷ்டமிருப்பின் எல்லாம் சரியாக இருக்காதா ...... என்று தனக்குள்ளே எண்ணி பெருமூச்சு விட்டாள்

''தாதா! நான் ஓர் முக்ய வைத்ய விஷயமாகச் சென்றிருந்தேன். அந்த பேச்சில் நேரமாகிவிட்டது. குற்றத்திற்கு மன்னி

வேண்டும். இனிமேல் இம்மாதிரி நான் செய்வதில்லை'' என்று கூறும் போது கண்களில் பல பல வென்று நீர்த்துளிகள் சிந்தி விட்டன. கிழவரின் கண்களில் மழை பொழிந்து விட்டது.

நாட்கள்...வாரங்கள்...பலவாயின. விடியற்காலையில் மேள கோஷமும், பாண்டு வாத்தியத்தின் ஒலியும் ஆநந்தமாகப் பரவி மக்களைப் பரவசமுறச் செய்கின்றன. விடியற்கால நேரத்திற்கும் இந்த மங்களகரமான வாத்தியத்தின் ஒலிக்கும் எத்தகையோ ருக்கும் ஓர் தனித்த சந்தோஷமுண்டாகுமல்லவா? இம் மேள ஒலியைக் கேட்டதும் "சௌதாமினீ! யார் வீட்டில் கல்யாணம்? மேளமும் தாளமும் தடபுடல் படுகிறதே!'' என்றார்.

உட்கார்ந்திருந்த சௌதாமினி "தாதா! நம் டாக்டர் ஹரிநாத்திற்கு இன்று கல்யாணம். அதற்காக மேளம் வாசிக்கிறது'' என்று ஒருமாதிரி கம்மிய குரலால் கூறினாள்.

கிழவர்:—என்ன! ஹரிநாத்திற்கா விவாகம்!...சௌதாமினி... நமக்கு அழைப்பு கூட அனுப்ப வில்லையா! எனக்கு இதுகாறும் தெரியாதே? உனக்குக்கூட தெரியாதா! பெண் யாரு—

சௌதாமினி:—தாதா! நமக்கு அழைப்பு வந்தது. நான் வேலையின் தொல்லையில் அதைக் கொடுக்க மறந்து விட்டேன். பெண் அவருடைய சொந்த மாமனின் மகள்தானும்—என்று கூறும்போது சௌதாமினியின் தலை கீழே குனிந்தது. இது கேட்ட கிழவர் "ஊம்...என்ற சப்தத்துடன் பெரிய மூச்சு ஒன்று விட்டு அப்புறம் திரும்பிப் படுத்துவிட்டார்.

சௌதாமினிக்கும் கல்யாணத்திற்கும் சம்மந்தமில்லை எனினும் அவள் மனது அடையும் வேதனையும் சங்கடமும் கூறத்திறமன்று. ஒரே விசனமும் கலக்கமும் அடைந்த நிலைமையிலேயே தன் தொழிற்சாலைக்கு (ஆஸ்பத்திரிக்கு) சென்றாள். அங்கு வேலை செய்யவும் மனம் இடங்கொடுக்க வில்லை. தேகம் அங்கு நடைப்பிணம் போல் உலாவி, எந்திரம்போல் வேலை செய்கிறதே யன்றி மனம் முற்றும் ஹரிநாத்தின் திருமண அறையில் சென்று லயித்து விட்டது.

இத்தனை நேரம் விவாகம் இப்படி நடக்கும்...இம்மாதிரி இருக்கும்....என்றெல்லாம் யோசனையில் கலங்குகிறது. தன்னுடைய பாப ஜென்மாவை எண்ணி எண்ணி வெறுப்பும் கோபமும் விசனமும் உண்டாகின்றன. ஹரிநாத்தும் பார்ப்பவர்களுக்குச் சந்தோஷமாக நடந்து கொள்கிறுனே யன்றி மணவறையை நோக்கும் போது எங்கு பார்த்தாலும் சௌதாமினியின் அதியற்புதமான உருவமே காட்சி யளித்து கதி கலங்கச் செய்கிறது. திக்கென்று தூக்கி வாரிப்போடுகின்றது.

“ஐயோ! சௌதாமினியை இழந்து விட்டோமே!” என்று நினைக்கும்போது தன் பெற்றோர்களின் உருவம் கண் முன்பு தோன்றுவதுபோல் இருக்கின்றது. இந்நிலைமையில் கல்யாணம் நடந்து விட்டது. ஹரிநாத் ஊர்மிளாவுக்கு மாங்கல்யம் கட்டும் போது, ஊர்மிளாவின் பிம்பம் அப்படியே மாறி, சௌதாமினியே வீற்றிருப்பதுபோலும், அவள் கழுத்திலேயே தான் மாங்கல்யம் கட்டுவதாயும் ஒரு பீதியும், உரு வெளித் தோற்றமும் தோன்றி திடும்மென்று கலக்குகின்றது.

சௌதாமினிக்கோ, “மணி 10 ஆய்விட்டது. இப்போது தான் முகூர்த்தம் நடக்கும்; மாங்கல்யதாரணம் நடக்கும்” என்று நினைக்கும்போது, தன் கழுத்தில்தான் ஹரிநாத் மாங்கல்யம் கட்டுவதுபோல் ஒரு உருவெளித்தோற்றம் தோன்றி திடுக்கென தூக்கி வாரிப்போட்டது. தான் நிற்கும் இடத்தையும், தன் கழுத்தையும் தடவிப் பார்த்துக் கொண்டாள்.

எத்தனைதான் தன் தொழிலில் மனத்தைத் திருப்ப முயன்று ப்ரயாசைப் பட்டாலும் சௌதாமினியின் மனம் அவளையே ஏமாற்றி விட்டு ஹரிநாத்தின் மணவறையில் ஓடுகிறது. அங்கிருந்து ஏமாற்றத்துடன் இங்கு வருகிறது. அவள் கண்முன்பு வைத்துள்ள அத்தனை மருந்து புட்டிகளும் ஏக காலத்தில் ஹரிநாத்தாக நிற்பது போன்ற தோற்றம் உண்டாக்கி அவளைத் தடுமாறி நிலை குலையச் செய்கின்றன.

"மகா பாவியாகிய நானு இதற்கு அருகதை!.......நானு இந்த மேன்மையான பொருளை ஆசைப்படுவது......சீச்சீ! பொருந்தாது. சற்றும் பொருந்தாது இது, கண்ணிருந்தும் குருடனுக நினைப்பது போல் மதி இருந்தும் மதியற்ற நிலைமையில் நினைப்பதாகும்...நானே அந்த பதவிக்குரிய பாக்யசாலியாயிருப்பின்......இம்மாதிரி பாழ் பிறவி பிறந்திருக்க மாட்டேனல்லவா......

ஹரிநாத்!...ஹரிநாத்...ஊர்மிளா!... நீயே பாக்யசாலி. நீங்கள் இன்பமே மயமாய் பல்லாண்டு வாழவேண்டும்....நான் இதைக் கூட மனத்தில் நினைக்கக்கூடாதா?...என் நினைப்பு இதற்குமா தகாது?... எங்கிருந்து இந்த சப்தம்...கந்தர்வ கானம்போல் வருகிறது....... ஆகா!...என்ன ஆநந்தம் .. என்ன உணர்ச்சியும், ஜீவ சக்தியும் நிரம்பிய சங்கீதம்!''...என்று அந்த கானம் வந்த திக்கையே நோக்கினுள்.

இவள் ஆஸ்பத்திரியின் மெத்தை அறையில் மருந்து கலப்பதால் அவ்வறையின் ஜன்னல் வழியாக வீதியை நோக்கினுள். தெருவுக்கும் இந்த இடத்திற்கும் வெகு தூரம் இருப்பினும் அந்த நல்ல பகல் வேளையில் சற்று அமைதியும் நிச்சப்தமும் குடி கொண்டிருந்ததால் கானம் வெகு இனிமையாகக் கேட்டது. வறுமைத் தேவியின் பூர்ண க்ருபை பெற்ற தம்பதிகள் அந்த அருள் ப்ரஸாதத்திற்கேற்ப கந்த உடையும், எண்ணெயைக் கண்டறியாத பரந்த தலையும், நெத்தியில் குங்குமம், திருமண் முறையே வைத்துக் கொண்டுமாகக் காணப் பட்டார்கள்

புருஷன் ஓர் உயர்ந்த ஹார்மோனியத்தில் வட நாட்டினரை விட அதிகமான இனிப்புடன் பாட்டு வாசிக்கவும், சிறு தாளத்தைச் சரியாகப் போட்டுக் கொண்டு மனைவி அப்போது பாடிக் கொண்டு வந்த பாட்டை முடித்து விட்டு, வேறு பாட்டு பாட எடுத்தார்கள். அப்பாடலின் அருமைக்காக சிலர் கும்பலாக அவர்களைச் சுற்றிக் கொண்டு நின்றுர்கள். அந்த பகல் வேளைக்கு உகந்த ராகமாகிய அஸாவேரி ராகத்தை முதலில் அவன் வாசித்த பிறகு அந்தம்மாள் பாடவாரம்பித்தாள்.

அஸாவேரி ராகம்—சாப்பு தாளம்.

(1) கானல் நீரல்லவோ மானிட வாழ்க்கை!
கருத்திலறிவதில்லையே (கா)

(2) ஹீன ஜென்மந்தன்னை ஹீன மென்றறியாமல்
வானக் கோட்டைகள் கட்டி வாழ்க்கையை நம்பாதே (கா)

(3) தோன்றுவன வெல்லாம் தோற்றத்தில் பலியாது
தோன்றிய தோற்றமே தோல்விக்குத் துணையாம் (கா)

(4) கிட்டாத பொருள் தன்னைக் கிட்டிட ஆசை கொல்லும்
எட்டியதாய் எண்ணி ஏங்கி ஏமாறுதே. (கா)

(5) நாடுவ தொன்றும் நடப்பது ஒன்றும்
நாடகமாம் இதை நன்கறிவாய் நெஞ்சே (கா)

(6) மானிலமளந்திட்ட மாயாவதாரனின்
ஊனமில் அருளொன்றே உற்ற பெருந் துணை (கா)

(7) அஞ்ஞான இருள் தன்னை அகற்றி யுன் வாழ்க்கையை
சுஞ்ஞான ஒளி பெற்றுச் சுகமுறுவாய் நெஞ்சே! (கா)

“ஹா ஹா!...... வாஸ்தவம்....மிகவும் ...... வாஸ்தவம்...... இந்தப் பாடல் எனக்கெனவே பாடப்பட்டதுபோலல்லவா இருக்கிறது. என்ன அருமை! என்ன இனிமை!......என்ன அர்த்தம்... எனது தற்போதிய வாழ்க்கையின் நாடகத்திற்கும், இப் பிச்சைக்காரர்களின் பாட்டுக்கும் எத்தனை பொருத்தமாகவிருக்கிறது! கிட்டாது என்றதை வெட்டவெளியாக அறிந்தும் அதைக் கிட்டிவிட ஆசை. கிட்டாததையே கிட்டிவிட்டதாக ஓர் பொய்த் தாபம்......... அத்தாபத் தீயே கடைசியில் வாழ்க்கையையே சிதைக்க வந்த பெருந் தீயாகிவிடுமன்றோ ... சந்தேகமில்லாமல் மனித வாழ்க்கை கானல் நீருக்கு ஒப்பானதேயல்லவா .... கானல் நீரைக் கண்டோடும் மானின் கதி எப்படியோ, அப்படியேயல்லவா என் கதியும்......என் விதியும் ...சீச்சீ... ...இனி நான் வீணான எண்ணத்தில் மனத்தை விடுவதா? ......நாடுவது ஒன்று; நடப்பது ஒன்று ஆம்....இதுதான் இம் மாயப்ரபஞ்சத்தின் மாயா விநோதமாகும்”...

என்றெல்லாம் மனத்துக்குள் எண்ணத்தின்மேல் எண்ணம் தோன்றி சௌதாமினியை அடியோடு பித்து பிடித்தவள்போலாக்கி விட்டது. கையில் பிடித்திருக்கும் மருந்து புட்டியுடன் வீதியை நோக்கியபடியே பதுமைபோல் நின்றுவிட்டாள். கூட்டத்திலிருந்த ஒருவன் ஒரு ரொட்டியை அவர்களிடம் கொடுத்தான். அந்த தம்பதிகள் அடங்காப் பசியுடனிருந்ததால் வெகு ஆவலுடன் அதை வாங்கிக்கொண்டு, உடனே பக்கத்திலிருந்த மரத்தடியில் ஹார்மோனியத்தை வைத்துவிட்டுத் தாங்களும் உட்கார்ந்து அந்த ரொட்டியை பெருங் களிப்புடன் பிய்த்துத் தின்றார்கள். அறுசுவை விருந்தை யுண்டு மகிழ்ந்தவர்களைப்போல் அந்த ஒரு சிறு ரொட்டித் துண்டினால் பரம த்ருப்தியும், பூர்ண சந்தோஷமும் கொண்டு எதிரிலிருந்த தெருக்குழாயில் தண்ணீர் குடித்துவிட்டு "அப்பாடா!' வென்று மரத்தடியிலேயே வந்து உட்கார்ந்தார்கள்.

தங்கள் கந்தத்துண்டை கீழே விரித்துக்கொண்டு புருஷன் உஸ்ஸென்ற சப்தத்துடன் மரத்தில் சாய்ந்தான். காலை முதல் பட்டினியாலும், வெயிலில் அலைந்து பாடிப் பாடி மிக்க அலுத்துப் போய்விட்டதாலும் அந்தம்மாள் புருஷனின் மடிமீது தலையை வைத்துக்கொண்டு வெகு ஆநந்தமாய்ப் படுத்துவிட்டாள்.

இந்த காட்சி நம் இளமங்கையாகிய சௌதாமினியின் மனத்திலிருந்த துன்பங்களை நீக்கி ஆநந்தத்தைக் கொடுத்தது. தம்பதிகள் என்றால் இணை பிரியாது சதா இன்பத்தையும், துன்பத்தையும் சமமாகப் பகிர்ந்து அனுபவிக்கும் இவர்களல்லவோ உண்மை பாக்ய சாலிகள். உண்மை ஆநந்தத்தை அநுபவிக்கும் உத்தமர்கள், புண்ணியாத்மாக்கள்...ஊம்......இதைப் பார்க்கவும் நான் பாக்ய மற்ற பாவி...

மகா பாவி நான் பார்த்தாலும் அவர்களின் அன்யோன்ய அன்பிற்கு பங்கம் நேரும்... என்று எண்ணியபடியே இமை கொட்டாமல் சிறிது நேரம் அங்கேயே பார்த்துக்கொண்டு தம்பித்து நின்றுவிட்டதில் தன் கையில் எடுத்த வேலையையும் மறந்தாள். தன்னையே மறந்தாள் என்றும் கூறலாம்.

ஏதோ மந்திரத்தால் மயங்கிக் கிடப்பவள் போல் உயிரற்று சோர்ந்துபோய் நிற்கும் அத் தருணம் கட கட வென்று நகைப்புக் குரலுடன் 'சௌதாமினீ! நீ இங்கேயா இருக்கிறாய்? நீ இன்று லீவு வாங்கிக் கொண்டிருப்பாய் என்றல்லவோ நினைத்தேன். உன் டாக் டருக்கு விவாகமாமே....ஐயோ, பாவம்! நீ போகவில்லையா''....என்று யாரோ குத்தலாகக் கூறிய வார்த்தைகள் சோர்ந்து கிடக்கும் சௌதாமினியை ஒரு குலுக்கு குலுக்கித் திரும்பிப் பார்க்கச் செய்தன.

இந்த வார்த்தைகள் அவள் காதில் ஈட்டி குத்துவதுபோல் தோன்றினும், துஷ்டர்களைக் கண்டால் தூர விலகு என்றதுபோல் இந்த வம்பிகளிடம் பேச்சு கொடுக்கக் கூடாதென்று தன் வேலையாகிய மருந்துகளைக் கலக்கிக் கொண்டிருந்தாள்.

இந்த வம்பர் கூட்டத்தில் ஒருத்தி...“அவள் எப்படியடீ கல்யாணத்திற்குப் போவாள்? முகத்தைப் பாரேன். அழுது அழுது கண்கள் சிவந்து விட்டன. தனக்கு விரோதி யொருத்தி......... என்பதற்குள் மற்றொருத்தி “ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? தனக்கு சக்களத்தி வந்து விட்டதை எப்படியடீ சகிப்பது? ஏமாந்து விட்டதை எண்ணி பாவம்....அழுகிறாள்''...என்றாள்.

அதுவரையில் பேசாதிருந்த சௌதாமினி கோபத்துடனும் துக்கத்துடனும் அவர்களை நோக்கி “நர்ஸ்! விளையாட்டே வினையாகும் என்றபோது வினையே பெரிய அனர்த்தமாகத்தான் முடியுமென்பதை மறந்து உளறுதேயுங்கள். நான் உங்கள் ஜோலிக்கு வருகிறேனா! உங்களுடன் பேசவாவது பேசுகிறேனா? நீங்கள் அனாவசியமாக என் மீது பகைமை கொண்டு வெகு நாட்களாக வம்புக் கிழுத்து வருகிறீர்கள். நானும் போனால் போகிறது பார்ப்போம் பார்ப்போம் என்று பொறுத்து வந்தேன். என் விஷயத்தைப் பற்றிப் பேச நீங்கள் யாரு?...இனி இம்மாதிரி செய்தால் நான் சும்மா இருக்க மாட்டேன், பெரிய டாக்டரிடமும், என்...மேல் அதிகாரிகளுக்கே உங்கள் விஷமத்தனத்தை தாராளமாகத் தெரிவித்து விடுவதோடு உங்கள் மீதுள்ள குற்றங்கள் பலவற்றையும் கூறிவிடுவேன்.

வீணாக பிழைக்கும் பிழைப்புக்குப் பங்கம் வரப்போகிறதே என்று நானும் பொறுத்துப் பார்த்தேன். இந்த ஆஸ்பத்திரியில் நீங்கள் செய்துவரும் குற்றங்கள் எனக்குத் தெரியாதென்று நினைக்க வேண்டாம்.......என் டைரியில் ஒவ்வொன்றையும் நோட் செய்து வைத்திருக்கிறேன். ஜாக்ரதையாகப் பிழையுங்கள்" என்று தன்னை மீறிய ஆத்திரத்துடன் கூறினாள்.

இதுகேட்ட நால்வரும் கண்கள் சிவக்க ஆத்திரத்துடன் சௌதாமினியின் கையில் வைத்திருந்த விலையுயர்ந்த மருந்துபாட்டிலைத் தட்டிவிட்டார்கள். பாட்டல் கீழே விழுந்து சுக்கல் சுக்கலாகி விட்டது. அதிலுள்ள மருந்து மிகவும் விலையுயர்ந்த மருந்தாகையால் சுமார் 15 ரூபாய் பெருமான அளவு அச் சிறிய புட்டியுடன் போய்விட்டது. அதே சமயம் ஆஸ்பத்திரியின் மேட்ரன் "இதென்ன கூச்சல்? என்ன உடைந்துவிட்டது...... யார் எதைப் போட்டீர்கள்!" என்று கேட்டுக்கொண்டே ஆத்திரமாக அங்கு வருவதை யறிந்த நால்வரும்... ..ஒன்றுமே அறியாது அப்போது தான் ஓடி வந்தவர்கள்போல் அபிநயித்து,

"ஐயயோ! சௌதாமினீ!.......இதென்ன அனியாயம்!... ... மருந்து புட்டியைப் போட்டு உடைத்துவிட்டாயே!"....இது மிகவும் விலையுயர்ந்த மருந்தாயிற்றே! அட க்ரகசாரமே.......ஏன் இப்படி அஜாக்ரதையாகச் செய்துவிட்டாய்! ஐயோ! உனக்கு என்ன உடம்பு?" என்று மிகுந்த பாசாங்கும், அபிநயமும் காட்டி, அனுதாபப் படுகிறவர்களைக் காட்டிலும் உண்மைபோல் கேட்டார்கள்.

அந்தோ! இந்த சண்டாளச் செய்கையையும், சதிகார நாடகத்தையும் கண்ட சௌதாமினியின் மனமும் இதயமும் எப்படித்தான் துடிக்கும்? எவ்வாறுதான் பற்றி எரியும்? எந்த உண்மையையும் அறியாத மேட்ரனுக்கு கண்ணுக்கு முன்பாக சௌதாமினியின கையிலிருந்து விலையுயர்ந்த மருந்து புட்டி விழுந்து உடைந்த தென்றுதான் தெரியுமேயன்றி இந்த வஞ்சகக்காரிகளின் நாட்டியம் எப்படித் தெரியும்?...மேட்ரன் கண்கள் நெருப்புப் பொறி பறக்க ஆவேசத்துடன் உள்ளே நுழைந்தாள். இதனுடைய விபரீதம் எந்த மட்டும் சென்று நிற்குமோ! பகவானுக்கே வெளிச்சம்!

# உங்கள் ஆவலைத் தீர்ப்பது எது?

# மாய ப்ரபஞ்சம்

மாய ப்ரபஞ்சத்தின் மகிமையான கருத்தென்ன? அதன் முடிவு என்ன? செளதாமினியின் வாழ்க்கையில் மறைந்து கிடக்கும் மர்மம் யாது? சன்யாசினியின் அதி யற்புதமான சரிதையின் ஸாரமென்ன? துஷ்ட நர்ஸ்களின் பொறாமையினால் இன்னும் என்னென்ன விஷ பாணங்கள் புறப்படப்போகின்றன. விஷபாணங்களது விளைவின் முடிவு என்ன? ஹரிநாத்தின் வாழ்க்கை விநோதம் எப்படி? ஊர்மிளாவைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவளிடம் நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள்? கோகிலாவும் கிழவரும் எப்படியாகிறார்கள்? ஹரிநாத்தும், செளதாமினியும் கொண்ட காதல் எந்த பவித்திரமான கங்கா நதியில் ... பயங்கர விபத்தில், கொடிய......கலக்கப்போகிறது, யாருக்கு பயங்கர கர்ப்பத்தினால் துன்பம் உண்டாகப்போகிறது! அக்ரமக்காரர்களின் அதிசயச் செயல்களும், திடுக்கிடும் பயங்கர சம்பவங்களும், மனத்தைப் பரவசமுறச் செய்யும் மனித வாழ்க்கையின் சித்திரங்களும் சன்யாசினியின் அதி விசித்திரமான முடிவும், இன்னும் பலவித விநோதமான சம்பவங்களையும் அடுத்துவரும் இதழ்களில் கண்டு களியுங்கள்.

# 1936-ல் வெளிவந்த நாவல்கள்

**இன்பஜோதி அல்லது பிள்ளைவீட்டாரின் கொள்ளை** ரூ. 1/4.

இரண்டு கொழுத்த பணக்காரர்க ளிடையே வரதக்ஷிணைப் பேய் தாண்டவ மாடிக்கொண்டிருந்த சமயம், இப் புத்தகம் அவர்களிடையே சென்று, பேயை ஓட்டி விமரிசையாக விவாகத்தை நடத்தி வைத்த பெருமை வாய்ந்தது.

**ராஜமோகன் அல்லது காதலின் மாட்சி.** ரூ. 1/4.

அந்தஸ்தில் வித்தியாச மிருப்பினும், இதயத்துடன் இதயம் கலந்த அன்பிற்கு வித்தியாசமில்லை என்ற தத்துவத்தையும், துஷ்ட சகவாசம் கொடுக்கும் பலன் என்ன? இன்னும் இதுபோன்ற அரிய நீதிகளை விளக்கிக் காட்டும் அருமையான நாவல்.

**ப்ரேமப்ரபா அல்லது வாழ்க்கையின் நிழல்** அணா. 8.

மனித வாழ்க்கை நிழலின் பயங்கரமும், சமூகத்தின் கண்மூடித்தன மான கொடிய ஆட்சியின் விபரீதத்தினுல் பச்சிளங் குழந்தைகளின் பரி தவிப்பும், உத்தமனையும் அதமனுகச் செய்யும் பணப் பேராசையும் இன்னும் இது போன்ற பல ருசிகரமான விஷயங்களும் நிறைந்தது.

**காதலின் கனி** (2-ம் பதிப்பு) விலை ரூ 2-8

இப்பெயருக்கேற்றவாறு ஒப்புயர்வற்ற காதல் ரசமும் அடங்காப் பிடாரியான மனைவியிடம் அகப்பட்டுக்கொண்டு சாதுவான புருஷன் படும் பாடும், குடுகுடுப்பாண்டி, மந்திரவாதி முதலியவர்களிடம் பாமர ஜனங்கள் அகப்பட்டுக்கொள்வதும், புதையல் எடுக்கும் விநோதமும், புது மாதிரியான வழியில் துப்பறியும் ஆச்சரியமும் நிறைந்தது.

**சாருலோசனு** (3-ம் பதிப்பு) விலை ரூ. 2-8

உண்மைக் காதலின் மகிமையை யறியாது பேராசைப் பிடித்த கிழவர் களுக்கு பண ஆசையினுல் தம்மக்களைக் கொடுத்துப் பெற்ருேர்கள் அடை யும் பாபமும், பெண்மக்கள் படித்த திமிரினுல் கட்டிய கணவனை மதியாது தலைகால் தெரியாமல் சுயேச்சையாகக் கெட்டழிந்து பரிபவப் படுவதும், இன்னும் மனத்தை உருக்கும் சம்பவங்களும் நிறைந்த, சமூக ஊழல்களை விளக்கிக் காட்டும் அதியற்புதமான நாவல்.

**ராதாமணி** (3-ம் பதிப்பு) விலை ரூ. 2-8

கணவரின் நிழல்போலுள்ள உத்தம மனைவியின் வாழ்க்கையும், உயர்ந்த காதலர்களின் மாட்சியும், விலைமகளாகப் பிறந்தும் விலையற்ற குணத்தினுல் பெருமையுற்று விளங்கும் அம்புஜத்தின் அருமையான ஜீவிய மும், விலைமகளின் லீலையால் அன்யோன்ய தம்பதிகளின் சிதறலும், நேரில் விஷயமறியாது பிறர் சொல்லைக் கேட்டுச் சந்தேகிப்பதால் விளையும் தீமை யும், இன்னும் அளவிலாத அநேக சாரங்களைக் கொண்ட துப்பறியும் நாவல்.

**சுகந்த புஷ்பம்** (3-ம் பதிப்பு) விலை ரூ 1

இரந்துண்ணுவோரிடத்தும், கற்பின் ஒளி உண்டென்றும், கற்பரசிக்கு அரசனும் துரும்பு என்றும் விளக்கிக்காட்டும் அருமையான நாவல். சமயோ சிதமான பாடல்களும், அழகிய சித்திரப் படங்களும் நிறைந்தது.

## நீங்கள் இன்னும் படிக்கவில்லையா?

# அனாதைப் பெண்

அல்லது

## கனிந்த காதலர்

அநுபவம் நிறைந்த ஆச்சரிய சம்பவங்களும், இணையிலாக் காதலும், ஈடிலாப் பக்தியும், ஒருங்கே அமையப்பெற்று, உயரிய படக் காட்சிக்கு உகந்த சிறந்த நாவல்.

விலை ரூ. 1/4. சந்தா நேயர்களுக்கு ரூ. 1.

முன்பணமனுப்பவும். வி. பி. கிடையாது.

---

உத்தமத் தந்தையின் புத்திர வாஞ்சையும், பணப் பேராசை பிடித்து, அற்ப குணமுடைய உடன்பிறந்தாளின் அட்டகாஸமும், பொறாமைக்குப் பெருமை என்றும் குறையாது என்றபடி சுகுண வதியின் சரிதமும், திடுக்கிடும் ஆச்சரிய சம்பவங்களும், இன்னும் பல அற்புதங்களும் நிறைந்த

**சுகுணபூஷணம் : :**

அல்லது **அற்ப புத்தியின் அவதி**

எனும் ஸ்வாரஸ்யமான நாவல்

இரண்டாம் பதிப்பு விலை அணா 4.

# சாந்தகுமாரி

---

"வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்" என்னும் ஜீவிய ரகஸியத்தை நன்கு எடுத்துக் காட்டும் நவீனம். தற்கால வாழ்க்கையின் உன்னத சித்திரம்.........உலக விநோதம்......... க்ரோதப் புயலும், காதற் சுழலும்......கோபத்திற்கு முன் பாபமு முண்டோ?......சண்டாளச் செய்கையின் சங்கட விளைவுகள்... அன்பின் வேகம் ஆற்றையும் கடக்கும் ... பிரேமையின் ஜோதி... முற்றும் வியக்கும் சரிதை......உயரிய படக்காட்சிக்கு உகந்த நாவல். பல பாஷைகளில் மொழி பெயர்த்து புத்தகமாகவும், படமாகவும் வெளிவரத் தகுந்த இணையிலாக் கதைப் போக்கு. தமிழர் பெருமை படக்கூடிய புத்தகம்.

விலை ரூ. 1. தபால் செலவுக்கு அணா 14

183002

# அன்பின் சிகரம்

பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினு மினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அருமையை அறியாத அன்பற்ற அல்கையின் முடிவு என்ன?.......

நான்கணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்

## "ஜகன்மோகினி" ஆபீஸ்.,

திருவல்லிக்கேணி, சென்னை.

---

PRINTED AT TATA PRESS & PUBLISHED BY
V. M. PARTHASARATHY, MADRAS.

"வந்தேன்...கண்டேன்...வென்றேன்"
எனக் கூறினார் ஸீஸர்

**அஸன் தாஸ்**

தமிழ்ப் பேசும் படம்

# நவயுவன்

அல்லது

## கீதா ஸாரம்

தத்ரூப லண்டன் மாநகர் காக்ஷிகளுடன்

வெற்றிக் கொடி நாட்ட வருகிறது!

லக்ஷக் கணக்கானவர்கள் அதைப் பார்ப்பார்கள்

லக்ஷக் கணக்கானவர்கள் பார்த்துப்
பரவசமடைவார்கள்


தமிழ் நாட்டின் மதிப்பை உறுதிப்படுத்தும் படம் இதுதான்

Sale rights for
Burma, F.M.S., S.S.
Available

தயாரிப்பவர்கள் :—

அஸன் தாஸ்
கிளாஸிகல் டாக்கீஸ்,
"கலீல் மான்ஷன்" மவுண்ட் ரோடு, மதராஸ்.

Jaganmohini Vol. XIV—No. 5 Regd. No. M. 2210.

தலை வலிக்கு

# Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும்

விலக்குங்கள்




## அம்ருதாஞ்சனை உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும் சொஸ்தப்படுத்துகிறது.

## அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா பம்பாய்.